SWATHANTRA SANGU Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

சட்ட சபை நாட்டியம்



—*Courtesy* : 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்'

டேல்லி சட்ட சபையில் சில அங்கத்தினர்கள் அவ்வப்போது குதிப்பது அது நாட்டியச் சபையோ என்று எண்ண நேரிடுகிறது.

முக்கிய கட்டுரைகள் :—

- 'குழந்தைகளை'க் கொல்லவா?—படம்
- திப்புவின் பொழுது போக்கு
- 'நூர் உன்னிஸா'—கதை
- நாதஸ்வரம் ராஜரத்தினம் பிள்ளை
- மீராபாயின் உருக்கமான கடிதம்

புத்தகம் 4. பங்குனி மீ 17உ (30-3-34) வெள்ளி இதழ் 18.

Rambles in Vedanta

BY

B. R. RAJAM AIYAR

THE variety of the *pabulum* presented in this volume will be found pleasant and delicious both by the young and the advanced. While every morsel it contains is nutritious and easy of assimilation, not a few delicacies will be discovered which are exquisitely spiced and flavoured with stories and illustrations from the Puranas. The aim which runs through all—from the short fancy of Suka's advent to the long life-tale of Vasudeva—is the realisation of the Self, the knowledge of the Atman the elaboration and impression of the sublime truth taught by all religions, by the Vedas and the Puranas by the hoary sages of antiquity, by the Lord Sri Krishna, and reiterated by the Lord Jesus Christ in those hallowed words which will live for ever —"What shall it profit a man, if he shall gain the whole world and lose his own soul?"

RS. 5

Swathantra Sangu Book Depot

Triplicane :: Madras.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088 | ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] பங்குனி மீ 17உ வெள்ளிக்கிழமை (30—3—1934) [No. 18

குடிசைத் தொழில்கள் சாகவா?

ஏதோ ஓர் குடிசைத் தொழில் விருத்தியடைந்து வருகிறதே என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தோம். அந்தத் தொழிலுக்கும் சாவு வந்து விடும் போலிருக்கிறது. நெருப்புப் பெட்டி கைத்தொழிலைத்தான் நாம் குறிப்பிடுகின்றோம். மலையாளத்திலும் கொச்சியிலும் உள்ள கிராமங்களில் பெட்டியை ஒட்டிக்கொண்டும், குச்சியைச் செதுக்கிக்கொண்டும் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் ஜீவித்து வருகின்றன. ராமனாதபுரம் ஜில்லாவில் குச்சிக்கு மருந்து தோய்க்கும் தொழிற்சாலைகள் இருந்து வருகின்றன. தென் மலையாளத்திலும் ராமனாதபுரத்திலும் மட்டும் 20 ஆயிரம் குடும்பங்கள் இந்தத் தொழில் செய்து ஜீவித்து வருகின்றனவென உத்தேசமாகக் கூறலாம். அந்நிய நாட்டினின்று தீப்பெட்டிகள் இனி மலிவாக இறங்கத் தொடங்கிவிட்டால் இத்தனை குடும்பங்களும் சோற்றுக் கென்ன செய்யுமோ?

தீப்பெட்டிகளின்மீது எக்ஸைஸ் வரி போடுவதென்று டெல்லியில் சொன்னதுதான் தாமதம். சின்னச் சின்னத் தொழிற்சாலைகளும் குடிசைகளும் ஏங்கத் தலைப்பட்டு விட்டன. ஒரு ரூபாய் பெறுமான தீப்பெட்டி தயாரிப்பதற்கு 5 அணா எக்ஸைஸ் வரி தரவேண்டுமெனக் கேட்டால் எப்படித் தரமுடியும்? தொழிற்சாலைகளுள்ள பிரதேசங்களில் ஒரு தம்பிடிக்கு ஒரு தீப்பெட்டி வீதம் கிடைத்துக்கொண் டிருந்தது ஏழைகளுக்குப் பரம உபகாரமாயிருந்தது. இந்தச் சிறிய தொழிற்சாலைகள் எடுபட்டு விட்டால் இந்த ஊர்களில் கூட 5 தம்பிடிக்கு ஒரு தீப்பெட்டி வாங்கவேண்டி வருமே என ஏழைக் கிராமவாசிகள் அனைவரும் பேசிக் கொண் டிருக்கின்றனர்.

சென்ற இரண்டு மூன்று வருஷங்களாகத் தீப்பெட்டி உபயோகம் நாட்டில் வரவர ஜாஸ்தியாகி வந்ததற்குக் காரணம் பெட்டி மலிவாகக் கிடைத்ததும் குடிசைத் தொழிலா யிருப்பதுமே. ராமனாதபுரம் ஜில்லாவில் வந்து பார்த்தால் சின்னஞ் சிறு பாலர்கள் கூட பெட்டி செய்துகொண்டும் லேபிள் ஒட்டிக்கொண்டும் இருக்கும் காட்சிகளைக் காணக்கூடும். இவ்வளவு உற்சாகமாக ஏழைகள் செய்துவந்த ஜீவனம், இந்த அதிக வரி அமுலுக்கு வந்த பின்பு என்ன ஆகுமோ யார் கண்டது?

உள்நாட்டுத் தீப்பெட்டி கிராக்கியாகி விட்டதானால், வெளி நாட்டிலிருந்து இறக்குமதி யாகும் 'பெட்ரோல் லைட்னர்'கள்தான் அதிகமாக விலையாகத் தொடங்கும். இதுதான் குடிசைத் தொழில்களுக்கு இந்திய சர்க்கார் ஆதரவு தருவதாகச் சொல்வதற்கு இதுதான் லட்சணமோ?

'குழந்தைகளை'க் கொல்லவா?

—*Courtesy*: ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

சிறு பிராயத்திலுள்ள தீக்குச்சித் தொழிலையும் சர்க்கரைத் தொழிலையும் கொன்று விடுவதென்று பொக்கிஷ மந்திரியான ஷுஸ்டர் துரை கனவு கண்டாரென சித்திரக்காரர் கற்பனை செய்திருக்கின்றார்.

அவரது கடைசிப் பேச்சு

கடைசியாகப் பேசுவதைக் கொஞ்சம் உபயோகமுள்ள பேச்சாகச் செய்திருக்கக்கூடாதா? சென்னைக் கவர்னர் ஸர் ஜார்ஜ் ஸ்டான்லி சட்டசபையில் அன்று பேசிய பிரசங்கத்தையே நாம் குறிப்பிடுகின்றோம். இனி ஸர் ஜார்ஜ் ஸ்டான்லி அவர்களுக்கு வைஸ்ராயின் சிம்மாதனம் காத்துக் கொண்டிருக்கிறது. அங்கிருந்து அவர் சீமைக்குப் போய்விடப் போகிறார். ஆகவே போன வாரத்தில் அவர் சட்டசபையில் பேசியதுதான் இந்த மாகாணத்திற்கு கடைசிப் பேச்சு. ‘பழம் எப்போதாவது பழக்காதா?’ என்று இலவமரத்தில் கிளி காத்துக் கொண்டிருந்ததாம். திடீரென்று பழம் வெடித்து பஞ்சு பறக்க ஆரம்பித்ததாம். கவர்னர் பிரமாதமாகப் பேசப்போகிறார் என்று இந்த மாகாணத்தின் விவசாயிகள் காத்திருந்தார்கள். உபயோகமில்லாத பேச்சென்று கடைசியில் தெரிந்தது.

தமது பிரசங்கத்தில் இந்த மாகாணத்தின் விவசாயிகள் படுந்துயரைப் பற்றிக் கவர்னர் பிரஸ்தாபித்தார். வியாதியை வர்ணித்து உடுக்கு அடிப்பதனால் வியாதி தீருவதில்லை. மருந்தினால் தான் வியாதி தீரக்கூடும். சும்மா விவசாயிகளின் கஷ்டத்தை எடுத்துரைத்து விடுவதால் மட்டும் கஷ்டம் தீர்ந்துவிடுமா? அந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்கு ஒரு உபாயத்தைக்கூடக் குறிப்பிடாமல் கவர்னர் பேசியிருக்கிறார். “என்ன பேச்சு வேண்டியிருக்கிறது?” என்றே தோன்றுகிறது.

வெள்ளைக் கடுதாசித் திட்டத்தைப் பற்றியும் புதிய அரசியலைப் பற்றியும் ஏதாவது அபிப்பிராயங்கள் உதிர்ப்பாரோ என்று சில சட்டசபை அங்கத்தினர்கள் காத்திருந்தார்கள். அவர்களுக்கும் கவர்னர் பெருமான் ‘கடுக்கா’ கொடுத்துவிட்டார். வெள்ளைக் கடுதாசித் திட்டத்தைப்பற்றி இப்போது ஒன்றும் சொல்லலாகாது என்று அவர் பேச்சில் நழுவியோடியது அநேகருக்கு ஏமாற்றத்தையே உண்டாக்கியிருக்கும்.

ஆனால் கவர்னர் இந்த மாகாணத்துக்குத் தந்த கடைசிப் பரிசு ஒன்றுண்டு. இந்த சென்னைச் சட்டசபைக்கு இன்னும் ஒரு வருஷம் ஆயுள் இருப்பதாக அவர் மங்களாசாஸனம் செய்துவிட்டார். கலைத்து ஒட்ட வேண்டிய ஓர் சபையை எதற்காக நீட்டி வைக்க வேண்டுமோ தெரியவில்லை. இப்போதுள்ள சட்டசபையின் லட்சணத்தைப் பற்றிக் கீரைக்காரிகூட அறிவாள். மந்திரி சபையின் வக்கணையோ அதைவிட இலட்சணம். இந்த சட்டசபையை நீட்டி வைத்ததைவிட யாதொரு சபையுமில்லாமல் பிரிட்டிஷ் அதிகாரிகளே இந்த மாகாணத்தை ஆளவேண்டும் என்று கவர்னர் சொல்லியிருக்கலாமென்று தோன்றுகிறது.

‘மட்டு’ மாஜிஸ்திரேட்

வட மதுரையில் அந்த ஊர் மாஜிஸ்திரேட் ஒரு பாங்கியின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தில் தலைமைவகித்தார். பாங்கியின் அதிகாரிகள் பீகார் பூகம்ப நிவாரணத்திற்காக வைஸ்ராய் நிதிக்கு ஆயிர ரூபாயும், ராஜேந்திரப் பிரசாத் நிதிக்கு ஆயிர ரூபாயும் அனுப்புவதாக ஏற்பாடு செய்திருந்தார்களாம். அந்த மாஜிஸ்திரேட்டுக்கு ஆயிர ரூபாயை ராஜேந்திர பாபுவின் நிதிக்கு அனுப்புவது பிடிக்கவில்லையாம். அவர் ஆட்சேபித்தாராம். ஏன் இவ்வாறு அவர் ஆட்சேபிக்க வேண்டும்? ராஜேந்திர பாபு காங்கிரஸ் வாலாவென்றால் அவர் மூலமாக பீகாரில் கஷ்டப்படுபவர்கள் உதவி பெறக் கூடாதென்று அர்த்தமா? பீகார் கஷ்ட நிவாரண விஷயத்தில் சர்க்காரோடு பூர்ணமாக ஒத்துழைக்கத் தயாராயிருப்பதாக மகாத்மா அன்று பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். ஆனால் சர்க்காருடைய சில சில்லரைக் குஞ்சுகள் ராஜேந்திர பாபுவின் கோஷ்டிக்கு உதவி செய்ய மறுக்கின்றன. இந்தக் குஞ்சுகளின் வாலாட்டத்தை மத்திய சர்க்கார் நிறுத்தலாகாதா?

இதுதான் கவுரவமோ?

எல்லைப்புற காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவரான உபயதுல்லாகான் என்பவர் சிறையில் உண்ணாவிரதமிருந்து வருகிறார் என்பது அனைவருமறிந்த விஷயம். உடனே இவ்விஷயத்தில் வைஸ்ராய் சிரத்தை காட்ட வேண்டுமென்றும் உபயதுல்லாகானை விடுதலை செய்ய வேண்டுமென்றும் பண்டித மாளவியா வைஸ்ராய்க்கு ஒரு தந்தியடித்திருந்தார். அந்தத் தந்திக்கு “வைஸ்ராய் ஒன்றும் செய்யப் போவதில்லை. எல்லைப்புற மாகாண சர்க்கார் ஏதாவது செய்து கொள்ளட்டும்” என்று மாளவியாஜிக்குப் பதில் கிடைத்திருக்கிறது. மரணத்தின் எல்லையில் ஒரு அரிய தலைவர் தடுமாறிக் கொண்டிருப்பதைக் குறித்து பூஜ்ய மாளவியாஜியே ஒரு தந்தி அடித்திருக்க அதற்கு இத்தகைய பதிலைத் தருவது வைஸ்ராய்க்கு கவுரமானதா வென்று கேட்கின்றோம்.

ஜாலியன் தோட்டத்திலே

“இந்த ஜாலியன் வாலாத் தோட்டத்திலேயே ஒரு வட்டமேஜை கூடி இந்த நாட்டுக்குப் புதிய அரசியல் ஏற்படுத்த வேண்டும்........ போலீஸ் இலாகாவையும், இராணுவத்தையும் இந்தியர்கள் கைக்குள் விடுவதாயிருந்தால் இன்னும் 10 வருஷ காலத்துக்கு இந்தப் பிரிட்டிஷாரை நான் ஒன்றும் கேட்காமலிருக்கிறேன்” என்று டாக்டர் கிச்சிலு தமது கோரிக்கையைச் சிறையினின்று வெளிவந்ததும் கூறியிருக்கிறார். தியாகிகளின் இரத்தம் ஓடிய அந்த ஜாலியன் வாலாத் தோட்டந்தான் இந்திய அரசியலைப்பற்றி முடிவு செய்யத் தகுதியான இடம். இந்தியர்களின் நலத்துக்காகவே இராணுவமும் போலீசும் இருக்கிறதென்று பசப்பிக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் அதிகாரிகள் கிச்சுலுவுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

ஜரூர் வேலைக்கு அடையாளமோ?

திருச்சிராப்பள்ளி முனிஸிபாலிட்டியில் தண்ணீர்க் குழாய் இலாகாவைப் பற்றிய பேச்சு ரொம்ப காரமாகப் போய்விட்டதாம். கடைசியில் ஒரு அங்கத்தினரை பிடித்து வெளியே தள்ளிவிட்டதாகவும் வதந்தி. அவ்வளவு ஜரூராக முனிஸிபல் வேலை நடக்கிறதாக காட்டிக் கொள்கிறார்களாக்கும்!

அரிசி மார்க்கட் தடபுடல்

ஒரே வாரத்தில் சென்னை அரிசி மார்க்கட்டில் ஒரு அமளி நடந்து விட்டது. சென்னை ஆங்கிலோ இந்தியப் பத்திரிகையான மதராஸ் மெயிலில் அதன் டெல்லி நிருபர் சென்ற 13-ஆ யன்று ஓர் சரடு திரித்தார். "அந்நிய நாட்டினின்று இறக்குமதியாகும் அரிசி மீது இந்திய சர்க்கார் வரிபோடப் போகிறார்கள்" என்பது அவர் செய்தி. அவ்வளவுதான். உடனே வெளிநாட்டு அரிசி வரவழைத்து விற்கும் வர்த்தகர்கள் அனுப்பி யிருந்த ஆர்டர்களை நிறுத்தியது மட்டு மின்றி மூட்டை ஆறு ரூபாயாயிருந்த அரிசியை ஆறரை ரூபாயாக உயர்த்தி விட்டார்கள். ஆனால் இரண்டு மூன்று தினங்களுக்குள் வேறு பத்திரிகைகளில் "அரிசி இறக்குமதிக்கு அதிக வரி போடுவதாக உத்தேசமில்லை" என்ற செய்தி தோன்றிற்று. உடனே உள்ளூர் வியாபாரிகளின் நாடி தளர்ந்து விட்டது. விலையும் 6½ ரூபாயிலிருந்து ரூ. 6-1-0-க்கு இறங்கி விட்டது. அந்நிய அரிசியை வரவழைத்து விற்கும் தொழில் சுயநலம் மிகுந்த ஏதோ சில சென்னை வியாபாரிகளின் கையில் தான் இன்றைக்கு இருந்து வருகிறது. தஞ்சாவூர் அரிசியும், திருநெல்வேலி நெல்லும், நெல்லூர் அரிசியும் எப்படி நாசமாய்ப் போனால் அவர்களுக்கென்ன?

சியத்தினின்று அரிசி இங்கு இறங்குவது சென்ற வருடத்தை விட இந்த வருடத்தில் அதிகமாயிருப்பது வருந்தத்தக்க விஷயம்.

1932—33-ல் 31211 டன்கள் வந்தன.
1933—34-ல் 45176 டன்கள் வந்தன.

விலையும் வர வர நயமாக்கப்பட்டு விட்டன. அதற்குக் காரணம் அரிசியை வாரிக்கொண்டு வந்து இறக்கும் ஜப்பானியக் கப்பல்களின் குறைந்த தூக்குக் கூலியே யாகும். இந்தியாவினின்று இரும்பு வாங்கிக் கொண்டு போவதற்காக ஜப்பான் கப்பல்கள் வருகின்றனவாம். வரும்போது சும்மா வருவானேனென்று கப்பலுக்கு அடிப்பாரமாக அரிசியை வாரிக் கொட்டிக் கொண்டு வருகிறார்களாம். ஆதலால் தான் அந்நிய அரிசி அவ்வளவு விலை சரசமாயிருக்கிறது. இன்னும் இரண்டு வாரத்திற்குள் 10 லட்சம் மூட்டைகள் சென்னை ஹார்பரில் வந்து இறங்கப் போவதாக வதந்தி. அட அநியாயமே!

"சோதனைக் காலம்"

[நமது பரம அன்பர்களில் ஒருவராகிய ஸ்ரீயுத கே. ஸ்ரீநிவாஸன் பம்பாயில் 'ஸன்' (சூரியன்) என்ற ஓர் ஆங்கில தினசரிக்கு ஆசிரியராக அமர்ந்திருப்பது நமக்கு பெரு மகிழ்ச்சி யளிக்கிறது. 'மணிக்கொடி'யின் மூலம் ஸ்ரீயுத கே. ஸ்ரீநிவாஸனின் தமிழ்த் திறமையை அறிந்தோம். இப்போது அவரது ஆங்கிலப் புலமைக்கும் 'ஸன்' இடங் கொடுத்திருக்கிறது. அவரது பத்திரிகையின் முதல் இதழின் முதல் தலையங்கமே அவரது ஆசிரியத் திறமைக்குச் சான்று. —சங்கு ஸுப்ரஹ்மணியன்.]

சந்தேக இருள் சூழ்ந்த சமயம். பயத்தால் நடுக்கம். சீதைக்கு சோதனை. அப்போது உதயமாயிற்று. ஜானகி கடைசியில் வென்றாள். அமர்க்களத்தில் அமளியாய்த்தானிருந்தது. முடிவு யாதாமோ? அன்றைக்கு இராவணனே ஜயிப்பான் போலிருந்தது. சகோதரனையும், பாதி சேனையையும், மனோ வலிமையையும், அஸ்திர சஸ்திரங்களையும் இழந்த ராவணன் அன்று பிரும்மாஸ்திரத்தைப் பிரயோகம் செய்து பார்த்தான். அன்றைய தினம் அவனுக்குத்தான் வெற்றி. லங்கையிலெல்லாம் கோலாகலம். ராவணனுக்கு ஓர் யுக்தி தோன்றிற்று ராமனும் லட்சுமணனும் அமர்க்களத்தில் மாய்ந்து கிடப்பதாக ஓர் மாயக் காட்சியை சீதைக்குக் காட்டினால் அவள் மனதை மாற்றி விடலாமென அவன் எண்ணினான். உடனே உத்திரவுகள் பறந்தன. அரக்கர் உடலங்கள் கடல்களில் எறியப்பட்டன. சீதை ரணகளத்துக்குக் கொண்டுவந்து பார்வையிடுமாறு செய்யப்பட்டாள். உயிரற்று இறைவனின் சவம் கிடப்பதுபோலும், இளையவன் களேபரம் கிடப்பது போலும், அவள் கண்முன் தோன்றிற்று.

ஆனால் மாயைசெய்த அரக்கர் எண்ணம் கைகூடவில்லை. சீதை ரண களத்தைப் பார்வையிட்டதும் தனது அந்தராத்மாவைக் கேட்டாள். ஆனால் எதிரே லோக நாயகனின் சவம் கிடப்பது அவள் உயிரையே குலுக்கிற்று. உடல் நிலைகுலைந்தது. அவளுக்கு அப்போது பலமான சோதனைச் சமயம் அல்லவா? அந்த சோதனைச் சமயத்தில் அன்னை ஜானகிக்கு மனோ சக்தி ஊறிற்று. "எனது நாயகன் சாவதாவது? சத்தியத்துக்கு மரணமுண்டா? அறத்துக்கும் அவதியுண்டோ?" என்று தனக்குள் கேட்டுக்கொண்டாள். அருகில் விபீஷணரின் புத்திரி திரிசடை நின்றிருந்தாள். "அம்மா ராமனைத் தோற்கடிக்க முடியுமா? கடல் கரைபுரளுமா? வானம் இடிந்து விழவில்லையே! வேதங்களின் ஒலி ஓயவில்லையே! ஆகவே தர்மம் தானே கடைசியில் ஜயிக்கவேண்டும்!" என்று தேறுதல் கூறினாள்.

மூன்று நாள் ஆயிற்று. கால சக்கிரம் சுழன்றது. சீதை சுதந்திர மடைந்தாள்.

இன்றைக்கு இந்திய சுதந்திர இயக்கமானது அன்று சீதாதேவி இருந்த நிலையிலேயே இருக்கின்றது. அதனுடைய சக்தியை எதிரிகள் குறைவாக மதித்துப் பேசுகின்றனர். போலி நண்பர்கள் போலி உபதேசங்கள் செய்கின்றனர். இதுதான் சோதனைக் காலம். கடைசியில் உண்மையான நம்பிக்கை வென்றே தீரும்!

இந்திய தேசியத்துக்கு முன்னே ஒரு போலி அரசியலைக் காட்டி அதைக் கட்டித் தழுவும்படி சொல்கிறார்கள். தேசம் அதை அணைத்துக் கொள்வதா? கூடாது. ஆயிரம் தடவை கூடவே கூடாது!

இந்தியர்களனைவரும் 'ஹிந்து'க்களாம்!

அமெரிக்காவில் இந்தியர்களனைவரும் ஹிந்துக்கள் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைவிட ஆச்சரியமென்னவென்றால் இங்கிலாந்தில் கூட இந்த எண்ணம் இருந்து வருகிறதுதான் தமாஷ். லிவர்பூல் என்ற ஊரில் 'அப்பாஸ் மகமத்' என்பவர் மீது ஏதோ குற்றங்கண்டு பிடித்து கோர்ட்டில் நிறுத்தி யிருக்கிறார்கள். அப்பாஸ் மகமத் ஓர் ஹிந்து என்று சார்ஜ் ஷீட்டில் கண்டிருக்கிறதாம். ஸபாஷ்! ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு ஆங்கிலேயரும் பாடுபடுவதாகச் சொல்கின்றார்களே அதில் இதுவும் ஒரு வழிபோலும்!

திப்புவின் பொழுதுபோக்கு

குரங்குகளுக்கு வரி போட்டால்!

குடியானவர்கள் மீதுள்ள வரிச்சுமையைப் பற்றி வெகு ஆத்திரத்தோடு காங்குலி என்பவர் பம்பாய் கவுன்ஸிலில் பேசியிருக்கிறார். கிராமவாசிகளுக்கு நல்ல ரோட்டுகளுண்டா? ஆஸ்பத்திரிகளுண்டா? பள்ளிக்கூடங்களுண்டா? 'இந்த ஏழைக் கிராமவாசிகளிடமிருந்து வரி வாங்குவதைப் போல காட்டிலுள்ள குரங்குகள்மீது வரி போட்டு வசூலிக்கலாமே' என்பது காங்குலியின் கட்சி. பண ஆசை பிடித்துள்ள சர்க்காருக்கு இது நல்ல ஆலோசனைதான்.

வெள்ளை கறுப்பாதல்!

ஐரோப்பாவில் ஜீகோ ஸ்லோவேகியா நாட்டில் ஒரு விபரீத தொத்து நோய் மிருகங்களிடை பரவிக்கொண்டிருக்கிறதாம். வெள்ளைத் தோலோடிருந்த முயல்கள் இந்த நோயினால் கறுப்புத் தோல் பிராணிகளாக மாறிவிடுகின்றனவாம். அட அநியாயமே! மனிதனையும் 'ஜந்து' என்றே சொல்வதுண்டு. நிறத்திமிர் மிகப் படைத்துள்ள ஐரோப்பிய ஜாதியினர் இத்தகைய வியாதி மனித ஜந்துக்களுக்கு வரக்கூடாதென்று எப்போதும் கடவுளை வேண்டிக் கொண்டிருப்பார்களன்றோ!

போச்சு ஐயா தீர்மானம்!

போங்கோ அய்யா, ஓர் தீர்மானம் ஸெனேட் ஹவுஸில் தோற்றுவிட்டது எனக்கு மிக்க வருத்தமாயிருக்கிறது. காலேஜுகளில் இண்டர் மீடியட் வகுப்புகளில் பத்திரிகைத் தொழிலைப் பற்றி மாணவர்களுக்குப் பாடங் கற்றுக்கொடுக்க வேண்டுமென ஓர் தீர்மானத்தை ஒருவர் கொண்டுவந்தார். அந்தத் தீர்மானம் தோற்றுவிட்டது பற்றி எனக்கு இப்போது வருத்தம். இரண்டு நாளாவது வாய்மூடாப் பட்டினி கிடக்கப் போகின்றேன். பள்ளிக்கூடத்திலும் காலேஜிலும் பத்திரிகையென்றால் என்னவென்று மாணவர்கள் அறியாதிருக்கும்போதே தமிழ் நாட்டில் இத்தனை பத்திரிகைகள் புறப்பட்டிருக்கின்றனவே இன்னும் பள்ளிக்கூடப் பாடமாகவும் வைத்து பத்திரிகைத் தொழிலைக் கற்றுக்கொடுத்தால் அடடா நம் தேசத்தில் பத்திரிகை ஈசல், லட்சக் கணக்கில் பறக்க ஆரம்பிக்குமே—அதற்கில்லாது பிறக்கப் போவதாயிருந்த பத்திரிகைகள் பிறக்க வொட்டாமல் கர்ப்பத்தடை செய்து விட்டார்களே யென்று துக்கமாயிருக்கிறது.

விநியோகத்துக்கு முன்னே

பிரஸாத விநியோகம் ஆரம்பிக்கின்றவரையில் சில இடங்களில் அமைதி ததும்புவதைக் கண்டிருக்கிறோமல்லவா? ரிஸர்வ் பாங்கி வைப்பதற்கு முன் அதற்கு யாராரை இந்தியர்களிலிருந்து பொறுக்கப் போகிறார்களோ தெரியவில்லை. உத்தியோகம் தரும் அதிகாரத்தை சீமையிலுள்ள இந்தியா மந்திரி தம் கைக்குள்ளேயே வைத்துக் கொண்டிருக்கிறாராம். சட்ட சபைகளில் சத்தம் அதிகமில்லாதிருப்பதற்குக் காரணம் பிரசாத விநியோகத்துக்கு முன்னுள்ள 'அமைதி' போலிருக்கிறது.

ஷுஸ்டரின் லேவாதேவிப் புத்தி

பூகம்பத்தினால் கஷ்டப்படும் மக்களுக்கு ஒவ்வொரு அரசாங்கமும் எவ்வாறு உதவுகின்றது என்பதை விளக்கி பிரீ பிரஸ் ஜர்னல் ஒரு தலையங்கம் எழுதிற்று.

"நேபாளத்தில் அதன் வேந்தன் தனது கையினின்று 3 லட்ச ரூபாயும், ராணி ஒரு லட்ச ரூபாயும் கஷ்ட நிவாரண நிதிக்குக் கொடுத்தார்கள். ஆனால் இந்திய அரசாங்கமோ 50 லட்ச ரூபாயை எடுத்து வைத்து பூகம்பத்தினால் கஷ்டப் படுபவர்களுக்கு கடன் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பூகம்பத்திற்கு நிவாரண வழியைப் பார்த்தீர்களா?"

ஷுஸ்டரின் வட்டிக் கணக்குப் புத்தியைப் பார்க்கும்போது பீஹார் கஷ்டம் எற்பட்டாலும் ஏற்பட்டது, லேவாதேவிக்கடை வைக்க சந்தர்ப்பம் வாய்த்ததென்று நினைக்கிறார்போலிருக்கிறது.

3,00,000 கல்யாணம்

"3 லட்சம் பெண்களுக்கு இவ்வருடம் விவாகம் செய்து வைக்கப்போகின்றேன். கல்யாணச் செலவு நம்முடையது!" என்று ஜர்மனியில் ஹிட்லர் ஓர் பிரதிக்ஞை செய்து கொண்டிருக்கிறானாம். வேடிக்கை என்னவென்றால் இதைச் சொல்லுகின்ற ஹிட்லர் ஒரு பிரம்மச்சாரி!

'இமிடேஷன்' வேலைப்பாடு

பார்த்தால் பிரிட்டிஷ் சாமான் போலவே யிருக்கும்படி சில சாமான்களைச் செய்து ஜப்பானியர் விற்று வருகிறார்களாம். இந்த மோசடியை நிறுத்தவேண்டு மென்று ஜப்பான் கவர்ன்மெண்டுக்கு பிரிட்டிஷ் வியாபார மந்திரி ஓர் கடிதம் அனுப்பியிருக்கிறாராம். இமிடேஷன் சாமான்களுக்குத்தான் இப்போது உலகில் சுக்ரதசை வீசிக்கொண்டிருக்கிறது. என்ன செய்ய?

ஜப்பானில் பத்திரிகை நிருபர்கள்

பத்திரிகை நிருபர்களில் மகா சாமர்த்தியவான்கள் ஜப்பானியர்கள்தான். ஒரு துறைமுகத்தில் ஏதோ ஒரு கப்பல் வந்து நிற்கின்றது. வந்து நின்றவுடன் அதில் ஒரு பத்திரிகை நிருபர் ஒரு போட்டோ காமிராவுடனும் சில மாடப்புறாக்களுடனும் வந்து ஏறுகின்றான். கப்பலில் இருக்கும் பெரிய மனிதர்களைப் போட்டோ பிடிக்கின்றான். பேட்டிகண்டு பேசவேண்டியவர்களோடு பேசிக் குறித்துக்கொள்கின்றான். எல்லாவற்றையும் கவர்களில் போட்டுப் புறாக்களின் கழுத்தில் கட்டிவிட்டு கப்பலிலிருந்து பறக்கவிட்டு விடுகின்றான். புறாக்கள் பத்திரிகாலயத்திற்குப் பறந்து சென்று விடுகின்றன. பெரிய மனிதர்கள் கப்பலிலிருந்து இறங்குகிற சமயத்தில் உள்ளூர்ப் பத்திரிகைகளில் தங்களைப் பற்றிய முழுவிவரங்களும் வந்திருப்பதைக் கண்டு அதிசய மடைகின்றனர்.

மகாத்மா காந்தி எழுதிய

ஆரோக்கிய வழி

விலை அணா 4

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,

திருவல்லிக்கேணி, சென்னை.

நூர்-உன்னிஸா

(கே. பி. ஆர். எழுதிய கதை.)

நான் வேலூர் ஜெயிலிலிருந்து விடுதலை யடைந்து வந்து ஒருவாரமிருக்கும். ஒரு நாள் காலையில் நாற்காலியில் சாய்ந்துக் கொண்டு என்னுயிர் வெள்ளம் இனி எந்நிலத்தில் பாயப் போகிறதோ என்று யோசனை செய்து பார்த்துக் கொண்டிருந்தேன். தபாற்காரன் ஒரு சுத்தைத் தமிழ்ப் பத்திரிகைகளுடன் ஒரு கவரையும் கொண்டுவந்து கொடுத்தான். ஏகாங்கியான எனக்கு இவ்வுலகில் யார் கடிதமெழுதக் கூடுமென்று எண்ணிக் கொண்டே அதை உடைத்துப் படித்தேன். பின்வருமாறு ஆங்கிலத்தில் அது எழுதப்பட்டிருந்தது.

மதருஸ்
19—7—30.

குலாம் காதர் கான், எம். ஏ.,
ப்ரோ டிப்டி கலக்டர்.

என்னருமைத் தோழா,

நீ யென்னை மறந்திருப்பா யென்று நினைக்கவில்லை. இத்தனை வருஷங்களாகக் கடிதம் எழுதாததற்குக் காரணம் எனக்கு நீ இருக்குமிடம் தெரியாததுதான். இப்பவும், இந்தக் கடிதத்திற்கும், மேலேற்படும் நமது சந்திப்பிற்கும் நான் என் தங்கை—நூருன்னிஸா—நாம் படித்தபொழுது நம்முடன் விளையாடினவள், ஞாபகமிருக்கிறதா?—தற்செயலாகச் சென்ற பத்தாம் தேதி தினசரிப் பத்திரிகையில் உன் பெயரைக் கண்டு அதை எனக்குக் காட்டினாள். அவள் உன் 'இனிஷியல்' களைக் கூட நினைவில் வைத்திருந்ததால்தான் நீ என்று நிச்சயிக்க முடிந்தது. நீ அன்றுதான் வேலூர் ஜெயிலிலிருந்து விடுபட்டதாக பத்திரிகையில் கண்டிருந்தது. உடனே அவளுடைய யோசனையின் பேரில் உன் அட்ரஸுக்காக வேலூருக்கு—"டெமி அபிஷியலாக"—தந்தியடித்துப்பதில் வரவழைத்தேன். அது இன்று கிடைத்தது.

நமது பனிரெண்டாவது வயதில் திருச்சியில் படிக்கும் பொழுது ஒரு சிறு—பிள்ளைப் பிரதிக்ஞை பண்ணிக் கொண்டோமே—நினைவிருக் கிறதா? நாம் ஒருவரை யொருவர் அறியாமல் கலியாணம் செய்து கொள்வதில்லை யென்று? அதை நிறைவேற்றுவதற்காக இக்கடிதம். 22-7-30ல் சென்னையில் எனக்குக் கலியாணம். பத்திரிகை இத்துடனிருக்கிறது; நீ அவசியம் வர வேண்டியது

உன்
"குலாம் காதர்"

இக்கடிதம் மின்னலைப் போல என் மனதின் மறதியிருளை பளிச் சென்று போக்கிற்று. இந்தப் பத்து வருஷங்களாக பரதேசிபோல் திரிந்த பொழுதும், உப்பியக்கத்தின் காரணமாக சிறையிலிருந்த சென்ற ஆறு மாதமாக ஜாஸ்தியாகவும் என் மனதில் தோன்றித் தோன்றி என்னை மயக்கிய பெண்ணுருவம் யாருடையது என்று தவித்தேனே—அப்பா, அது நூருன்னிஸாவுடையதே. ஒரு சிறுமியின் முக்காடிட்ட குற்றமற்ற முகம், அதில் மை தீட்டிய இமைகளினிடையே குரு குரு என்று சஞ்சலித்த இரண்டு குறை கூறும் விழிகள், ரோஜாக்களினிடையே மல்லிகை போல கீழிதழைச் சற்றே கடித்து வெளியே தோன்றின பல் வரிசை—இத்தகைய வுருவம் மோகினிபோல் என் மனதில் குடிகொண்டு ஆட்டி வைத்தே—அது அவளுடையது!........ அவளுடைய மன நிலையும் என்னுடைய மன நிலையை ஒத்திருக்கக் கூடுமா என்ன! இல்லாவிட்டால் இக்கடிதத்திற்கு ஏன் காரணமாகிறாள்? கூட்டத்திற் கலந்து திரியுமென்னைக் குறித்தல்லவோ கூப்பிடுவது போலிருக்கிறது!

குலாம் காதருக்கும் எனக்குமிருக்கும் இந்த சிநேகம் ஆரம்பமானது ரொம்ப வேடிக்கை. எனது பத்தாவது வயதில் திருச்சியில் ஒரு பள்ளிக்கூடத்தில் மூன்றாவது கிளாஸில் சேர்க்கப் பட்டேன். அங்கே குலாம் என் "பக்கத்துப் பையன்." பெண்சாயலோடு வளர்ந்திருந்த வாலிபன்.

ஒரு நாள் கணக்குப் போடும் பொழுது குலாம் என் 'சிலேட்டை'ப் பார்த்து 'காபி' அடித்து விட்டான். அதெப்படி? வெளியாயிற்றென்றால், நான் பிசகாய்ப் போட்டிருந்த 'வழி' அவனுடைய 'சிலேட்டி'லும் காணப்பட்டது. உடனே உபாத்தியாயர் நான் 'காபி' அடித்தேனென்று என்னைப் பிரம்பால் அடித்தார்.

குலாம் சாயந்திரம் என்னை வீட்டுக்குப் போகும் பொழுது கூப்பிட்டு,

"நீ ஏன் என் மீது குற்றம் சாட்டவில்லை?" என்று கேட்டான். நான் பதில் சொல்லவில்லை.

அவனுக்கு என்ன தோன்றிற்றோ தெரியாது. "அடே, என்னோடு, எங்க மோட்டாரில் எங்கவூட்டுக்கு வா. அப்புறம் உங்கவூட்லே கொண்டு விட்ரேன்" என்றான். காரில் ஏறினோம். எனக்குக் கார் சவாரி செய்ய வேண்டுமென்ற ஆசை பூர்த்தியாயிற்று. 15 நிமிஷத்தில் தென்னூரில் அரண்மனைபோன்ற ஒரு வீட்டுவாசலுக்குக் கார் விர்ரென்று போய் நின்றது.

கயாஸுடீன் ஸாஹப் ஒரு பெரிய வர்த்தகர். ஆற்காடு நவாப் வம்சத்தைச் சேர்ந்தவராம். வீட்டின் முன் ஹாலில் பிரம்மாண்டமான வெல்வெட் திண்டுகள் போட்டு சாய்ந்துகொண்டிருந்தார். எதிரில் ஹுக்காவும் எச்சில் உமிழும் பாத்திர மொன்று மிருந்தது. எங்கு பார்த்தாலும் நிலைக் கண்ணாடிகள் பெரிய பெரிய மொகலாயப் படங்கள். ஒரு பளிங்கு மயிலில் சொருகப்பட்டிருந்த ஊதுவத்திகளிலிருந்து வாஸனை கம்மென்று வீசிற்று. தரையில் காலுக்கு மெத்தென்றிருந்த ரத்ன கம்பளங்கள் விரிக்கப் பட்டிருந்தன.

குலாம் குதித்துக் கொண்டு போய் அவரிடமேதோ சொன்னான். பிரமித்துப் போயிந்த என்னைப் பார்த்து அவர் "இங்கே வா!" என்று கூப்பிட்டார். பிற்காலத்தில் நான் மௌலானா ஷௌகத் அலியைப் பார்க்கும்போதெல்லாம் அவர் ஞாபகம் எனக்கு வரும். குலாம் என்னை அவரிடம் இழுத்துக் கொண்டு போனான். அவர் என்னைத் தடவிக் கொடுத்துக் கொண்டே தன் மனைவியைக் கூப்பிட்டார். உள்ளே யிருந்து அந்தம்மாளும் அவளுடைய இரண்டு பெண்களும் வந்தார்கள். இப்பொழுது ஞாபகத்திலிருந்து சொல்லுகிறேன். அந்தம்மாளுக்கு சுமார் முப்பது வயதிருக்கலாம்.

உயர்ந்து வளர்ந்த அழகான ஸ்திரீ. அவள் மெதுவாக ஒவ்வொரு அடி எடுத்து வைத்து வந்தபொழுதும் கால் சலங்கை கலீர்கலீரென்று சப்தம் செய்தது. மூத்த பெண் அலிமா, குட்டையாயும் ஸ்தூலமாயு மிருந்தாள். இளைய பெண் நூருன்னிஸாவோ குலாமைப் போலவே யிருந்தாள்.

அப்பொழுது அவளுக்கு எட்டு வயதிருக்கலாம். இவ்வளவு வர்ணனை செய்கிற சக்தி எனக்கு அப்பொழுதிருந்ததாவென்ற சந்தேகம் வேண்டாம். கிடையாது. ஆனால் என் மனதில் 'போட்டோ' பிடித்ததுபோல் பதிந்திருக்கிற அம்சங்களையே இப்போது எடுத்தெழுதுகிறேன்.

நூருன்னிஸாவின் உருவம் என் மனதில் வரைந்த சித்திரம் போல் நிற்கிறது. நான் முதல் முதலில் பார்த்த அன்று சரிகை மயமாயிருந்த பச்சைப் பட்டுப் பாவாடை உடுத்திருந்தாள். லேசான மஞ்சள் பட்டு ரவிக்கையும் ரோஜாப் பட்டுத் தாவணியும் அணிந்திருந்தாள். காலில் காப்பு, பாதஸரம், கையில் காப்புகள், விரல்களில் மோதிரங்கள், கர்நாடக முகம்மதியர்போல குருடு முதலியன கிடையாது. முகம் என் மனதில் அப்படியே இருக்கிறது. நீண்ட புருவங்களும் தலை மயிரும் கன்னங்கரேலென்றிருந்தன. பின்னலில்லாமல் தலைமயிரை முடிந்திருந்தாள். அது அவளுக்கு ரொம்ப அழகாக இருந்தது. அவள் உடலின் சிகப்புக்கு சாம்யமே சொல்ல முடியாது. அவள் கண்கள்— அவைகளின் தன்மையை எடுத்துச் சொல்ல முடியவில்லை. வேணுமானால் தாமரை யிதழ்கள் போன்றன, மீனுருவம் கொண்டன என்று கவியைப் சொல்லிக்கொண்டே போகலாம்.

கயாஸுடீன் தன் மனைவியிடம் ஏதோ சொன்னார். அவள் என்னை ஒருதரம் பார்த்துவிட்டு முறையே அலிமாவிடம் ஏதோ சொன்னாள். அலிமா உள்ளேபோய் ஆப்பிள், ஆரஞ்சு மாதுளைகள் நிறைந்த ஒரு பையைக் கொண்டு வந்தாள். அதை என்னிடம் கொடுத்தபோது குலாமின் தாயாருடைய முகத்தில் தோன்றிய அன்புப் பார்வையை நான் மறக்கவே முடியாது. என் கன்னத்தை ஒருதரம் தாய்போல வருடிக் கொடுத்தாள்.

குலாம் என்னைக் கூட்டிக்கொண்டு காருக்குச் சென்றான். அதில் ஏறி உட்கார்ந்தோம். புறப்படும்பொழுது வாசற் பக்கம் கண்ணெடுத்துப் பார்த்தேன். நூருன்னிஸா மூக்காடை பல்லால் கடித்துப் பிடித்துக்கொண்டு என் முகத்தைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள். என் கண்களை சந்தித்த நிமிஷம் உள்ளே ஓடிவிட்டாள்.

அன்று முதல் நானும் குலாம் காதரும் இணை பிரியாது திரிந்தோம். விளையாடினோம். அரட்டைகள் அடித்தோம். ஆகாசக் கோட்டைகள் கட்டி மகிழ்ந்தோம். ஸதா ஸர்வ காலமும் நான் அவன் வீட்டில் தானிருப்பேன். நூருன்னிஸாவும் எங்களுடன்தானிருப்பாள். நாங்கள் செய்வதையும் பேசுவதையும் உற்று கவனித்துக் கொண்டிருப்பாள். தானும்கூட விளையாடுவாள். தெரியாமல் பின்னால் ஒளிந்து வந்து கண்களைப் பொத்துவதில் அவளுக்கோர் ஆனந்தம். என், எனக்கும்தான் ஒருவித மகிழ்ச்சி அப்பொழுது உண்டாகும். அவள் கைகள் மிருதுவாக ரோஜாபோல இருக்கும். கைகளை எடுத்துவிட்டு கலகலவென்று சிரிப்பாள். அவள் கன்னங்கள் குழிவுபடும், அச்சமயம் என் மனதென்னவோ நான் எடுத்துச் சொல்ல முடியாத ஒரு சந்தோஷத்தை யடையும்.

நாலாவது பாரம் வரையில் நானும் அவனும் இப்படி யிருந்தோம். திடீரென்று என் தகப்பனாரை திருச்சியிலிருந்து மாற்றிவிட்டார்கள். பிறகு எனக்கும் குலாமுக்கும் சந்திப்பே கிடையாது.

பனிரெண்டு வருஷங்களுக்குப் பிறகு அவனிடமிருந்து இந்தக் கடிதம் வந்திருக்கிறதென்றால் என்சந்தோஷத்தை என்னென்பது?

மறுநாளிரவு வண்டியில் சென்னைக்குப் புறப்பட நிச்சயித்தேன். சென்னை வந்து சேர்ந்தேன்.

பந்துக்கள் நிறைந்த மஹாலில் குலாம் என்னைத் தன் பக்கத்திலமர்த்திக்கொண்டு பழைய நாட்களைப்பற்றி பேசிக்கொண்டே யிருந்தான். முகம்மது காஸிம் என்ற வித்வானின் பாட்டுக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் ரோஜா வர்ஷம்! அத்தரும் பன்னீரும் ஜலப்பிராயமாய் வழங்கப்பட்டன. ஆறு மணிக்கு ஸபை கலைந்தது. குலாம் என்னை பங்களாவின் மேல் மாடியிலிருந்த ஒரு அறைக்கு அழைத்துச் சென்றான். வெகு நேரம் அங்கே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம்.

குலாமின் தாயார் மகனைத் தேடிக் கொண்டு அங்கு வந்தாள். நானிருப்பதைப் பார்த்து பின்வாங்கி முகத்தை மூடிக்கொண்டாள்.

"அம்மா, யாரென்றெண்ணுகிறாய்? நம்ம—" என்று குலாம் ஆரம்பித்தான்.

"எனக்கு ஞாபகமிருக்கிறது. சௌக்யமாப்பா?"

"சௌக்யமம்மா!"

"எங்கிருக்கிறாய்?"

"திருச்சியில் இருக்கிறேன்."

"கலியாணமாயிற்றா?"

"இல்லை" என்றேன்.

பேசும் பொழுதே அவ்வுருவிற்குப் பின்னால் இன்னுமோர் இளம் உருவம் நிழல் போல நிற்பது போன்ற பிரமை தட்டிற்று. ஒரு நிமிஷம், நூருன்னிஸாவே என் முன் தோன்றினாளோ என்ற ஆசை! மறு நிமிஷம், சே! அதெப்படி முடியும்? அவள் பர்தாப் பெண் அல்லவோ? குலாமும் கடிதத்தில் எழுதினதைத் தவிர நேரில் அவள் பேச்சைப்பற்றியே எடுக்கவில்லை. அவள் யோக க்ஷேமத்தைப் பற்றிக் கேட்கக்கூட யோசனையா யிருந்தது. அவளை நிச்சயமாகப் பார்க்க முடியாதென்ற எண்ணம் ஏற்பட்ட பிறகுதான் குலாமுடன் ஸ்வய பிரக்ஞையுடன் பேசினேன்.

இரவு பத்துமணி சுமாருக்கு குலாம் படுத்துக் கொள்ளச் சென்றான். எனக்கு ஒருதனியறை ஒழித்துத் தந்திருந்தார்கள்.

என் தனி யறையில் தனிமையில் நான் படுக்கையில் படுத்துப் புரண்டேன். மின்ஸார விளக்கின் வெளிச்சம் எனக்குத் தாங்க முடியாததாகவிருந்ததால் அதை யணைத்துவிட்டு ஜன்னலைத் திறந்து வைத்தேன். அதன் வழியாக பூர்ணச் சந்திரன் என் படுக்கையின் மேலே தன் ஒளியைப் பரப்பினான். படுக்கையிலுட்கார்ந்துகொண்டு எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினேன்.

அதே வீட்டின் ஒரு பாகத்தில் அவளும் அப்பொழுது சஞ்சரித்துக்கொண்டிருந்தாளல்லவா!

என் ஹிருதய நிலைமையை அவள் அறிவாளோ? முடியாது. பூவின் அவாமணமாக வெளியேறித் தாக்குகிறது. நினைவில் புறப்படும் அலை எப்படியவள் ஹிருதயக் கரையில்

போய் மோத முடியும்? ஸாத்தியமில்லை........அக்கடிதத்தில் தன் சகோதரனைக் கருவியாகக் கொண்டு என்னையேனிங்கு வரவழைத்தாள்? என்னிடத்தில் அவளுக்கோர்—அதெப்படி நான் சொல்வது?

இந்த நினைவாக என் பேதை மனம் கேள்விகளும் மறுகேள்விகளும் போட்டுக்கொண்டு சமுத்திரம்போல அலையலையாய்ப் பொங்கிக்கொண் டிருந்தது.

நடு நிசியாயிற்று. எனக்குத் தூக்கம் வரவேயில்லை. பட்டணத்தின் ஓசையும் அடங்கிவிட்டது. தூரத்திலிருந்து சமுத்திரத்தின் அலறல்தான் காற்றில் மிதந்து வந்தது. திடீரென்று மனதில் ஒரு ஆசை உதித்தது. ஒருவேளை இப்பொழுது என்னை நூருன்னிஸா பார்க்க வரக்கூடுமோ? அல்லது என்னைத்தான் எங்காவது எதிர்பார்க்கின்றனளோ?

மெதுவான காலடி சப்தம் கேட்டது. ஆம். அது நூருன்னிஸாதான். வந்து எனக்கருகே யிருந்த ஜன்னலின் அப்புறத்தில் வந்து நின்றாள்! அதே உரு தான்! வயதிற்கேற்ற வாட்டசாட்டம் மட்டுமே வித்தியாசம். நிலவில் முகம் வியக்தமாகத் தெரிந்தது. இன்னது சொல்கிறேன் என்று அறியாமல் எழுந்து நின்று "எண்ணினபடி ஆயிற்றே!" என்றேன்.

ஒரு விரலால் தன் உதடுகளைப் பொத்திக் காட்டினாள். தன் மார்பில் வைத்திருந்த ஒரு கவரை எடுத்து என் கையில் கொடுத்தாள்.

"இதை ஊருக்குப் போய்ப்படி, நாளைக்குக் காலையிலேயே புறப்பட்டுவிடு, பார்த்தாய் விட்டது. நிமிஷம் தாமதிக்கக் கூடாது." என்று சொல்லித் திரும்பினாள்,

கொஞ்ச தூரம் சென்று திரும்பிப் பார்த்தாள்! நிலவின் வெளிச்சத்தில் அவளுடைய அழகான முகத்தில் கலவரத்தினால் முத்து முத்தாய் வியர்வைத் துளி இருந்ததைக் கவனித்தேன். நான் தாவியோடி அவள் கையைப் பற்றினேன். ஒரு நிமிஷம் அப்படியே நின்றோம்! மறு நொடியில் மெதுவாகக் கையை விடுத்துக்கொண்டு போய்விட்டாள்.

* * *

மறுநாட் காலை நான் பயணத்திற்குத் தயாராயிருந்ததைக் கண்டு குலாமின் முகம் வாட்ட மடைந்தது.

"என்ன சமாசாரம்?" என்றான்,

"அதான் ஒரு நாள் இருந்தாயிற்றே மற்றொரு சமயம் சாவகாசமாக சந்திப்போம். எனக்குக் கொஞ்சம் காரியமிருக்கிறது" என்றேன்.

அரை மணிக்குள் அந்த பங்களாவை விட்டு வெளியேறி விட்டேன்.

திருச்சியில் காவேரிக்கரை யோரத்தில் என் அறையிலிருந்து அதன் ஜன்னலின் வழியாக திரும்பவும் அதே சந்திரனைப் பார்த்துக் கொண்டிருந்தேன் எவ்வளவு மாறுபட்ட மனோபாவத்துடன்! கடிதத்தைப் பிரித்துப் படித்துப் பார்த்தேன்.

"இக் கடிதத்தை என் வாக்காகவும் என் அடையாளமாகவும் நீ வைத்துக் கொள்ளலாம். நாம் திருச்சியில் சிறு குழந்தைகளாக விளையாடின போது என் மனதில் உன்னிடம் ஏற்பட்ட பற்று என்னை விட்டு இன்னும் அகலவில்லை. ஏனென்றால் ஸதா உன் உருவம் சிலை போல என் முன் நிற்கிறது. நித்திய இளமையோடு உன்னுடன் விளையாடுவது போலவே கனவு காண்கிறேன். உன்னை மற்றொரு முறை இவ்வுயிரில் பார்க்க வேண்டுமென்ற அவாவும் நிறைவேறி விட்டது. இனி என் நாட்களை பூர்வம் ஜெபுன்னிஸாவைப் போலக் கழிக்கப் போகிறேன். என் தயாரிடம் நீ கலியாணமில்லை யென்று சொன்னது எனக்குத் திருப்தியைக் கொடுத்தது. இனிமேல் நீ இன்னுமொரு ஸத்ரீயுடன் பேசாது உன் வாழ்நாட்களை என் மனத்தோடு மட்டும் லயிக்கச் செய்து கழிப்பாயானால் நானும் சோர்வின்றி வாழ்வேன். அப்படியே செய்கிறேனென்று நீ எனக்குப் பதில் எழுத வேண்டாம். நீ செய்வாயென்று எனக்கொரு தீவிர நம்பிக்கை இருக்கிறது. அதே என் உயிர்நாடி, நான் மெய் மறந்து உன்னையே நினைக்கிறேன். ஆனால் நாமிருவரும் இவ்வுடலில் ஸதிபதிகளல்ல, சரீர இச்சை வேண்டாம். பூர்ணமாக என் ஆகாசத்தில் ஜொலிக்கும் சுக சந்திரனுக்குக் களங்க முண்டாக்காதிரு! சரிதானே?

இப்படிக்கு,
"நூர் உன்னிஸா"

அவ்வொளி மயக்கத்தில் அவளே மதியுருவுடன் வந்து என்னிடம் வாக்கு வாங்குவது போலிருந்தது.

என் மனமோகினியின் கட்டளைப்படி நான் உலக வழிகளில் திரிந்து வருகிறேன். நான் செய்யும் சகல காரியங்களிலும் நான் நினைத்த மாத்திரத்தில் என்முன் தங்கப்பதுமை **போல** வந்து நின்று என்னை உத்ஸாகப்படுத்துகிறாள். என் சோர்விலும் என் மனதின் முன் குதித்துக் கொண்டு வந்து என்னை ஆற்றுகிறாள்.

Have your Majestic figures at
R. DASEN'S ELECTRIC PHOTO STUDIO.
"The Best" and most up-to-date style and finish.
Artists & Bromide Enlargers & Oil Painters
55, Rattan Bazaar Road,
G. T., MADRAS.

30 வருட பிரக்யாதி
டாக்டர் ஜம்மி
வெங்கடரமணய்யாவின்
மருந்து
ஈரல், குலைக்கட்டி கோளாறென்னும் கொடிய நோயால் வருந்திக்கொண்டிருந்த எண்ணிறந்த பல குழந்தைகளைக் காப்பாற்றியிருக்கிறது. அநேக வீடுகளைப் பொலிவுறச் செய்திருக்கிறது. இம்மருந்து எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.
8, சாலைத் தெரு, மயிலாப்பூர் சென்னை.



மண்ணுங்கட்டி

(சிட்டி எழுதியது)

"அப்பா, அம்மா இன்னிக்கு பீபிள்ஸ் பார்க்குக்குப் போகணும்னு சொல்ரு."

"மண்ணுங்கட்டி பார்! போக்கிரிப் பயலே! பரீக்ஷை இன்னும் இரண்டு நாள்கூட இல்லை ஊர் சுற்றணும் என்கிறையா? உள்ளே போய்ப் படிக்கிறையா, உதைக்கட்டுமா?"

எதிர் வீட்டுக்காரருக்கும் அவருடைய பையனுக்கும் நடந்த மேற்கண்ட சம்பாஷணையை அறை ஜன்னல் மூலம் கவனித்துக்கொண்டேயிருந்தேன்.

ஒரு யோசனை யுதித்தது. என் எதற்கெடுத்தாலும் எல்லோரும் மண்ணுங்கட்டியை சந்தியிலிழுக்கிறுர்கள்? தவிர மண்ணுங்கட்டியைப் பற்றி அலட்சியமாக வல்லவா பேசிவிடுகிறுர்கள்! மண்ணுங்கட்டியை அவ்வளவு லேசான பொருள் என்று ஏன் நினைக்கிறுர்கள்? உலகமே மண் என்பதை இவர்கள் மறந்தார்கள் போலும். மேலும் மூன்றுவகை ஆசைகளில் மண்ணுசையே மிகவும் பேர்போனது என்பதை அநேகர் அறிவதில்லை.

குழந்தைப் பருவத்திலிருந்தே இந்த மண்ணுசை தொடங்கி விடுகிறது. பொன்னுசையும் பெண்ணுசையும் பிற்காலத்தில்தான் தோன்றுகின்றன. நீங்கள் நம்பவில்லை. சரி, நீங்கள் ஒரு காலத்தில் குழந்தையாயிருந்தது உண்மைதானே? அப்பொழுது உங்கள் தாயார் பார்க்காமலிருந்த சமயத்தில் எத்தனை தடவை மண்ணைத் திருடி சாப்பிட்டிருக்கிறீர்கள்! இது மண்ணுசை யல்லவென்றுல் வேறு எது தான்?

சரியாக இரண்டடிகூட உயரமில்லை. இந்தக் குட்டைக் கத்திரியான வாமனர் கூடவன்றே மூன்றடி மண் கேட்டார்! பலிச் சக்கரவர்த்தியிடம் போயும் மண்தானு கேட்கவேண்டும்! காரணம், மண்ணின் பெருமையும் மண்ணுசையும்தான். இப்பேர்ப்பட்ட மண்ணில் விளையும் மண்ணுங்கட்டியைப் பற்றி இழிவாய்ப் பேசினுல் யாருக்குத் தான் கோபம் வராது?

மண்ணுங்கட்டியைப்—மண்ணைப்—பற்றி எத்தனையோ புலவர்கள் பாட்டுகள் எழுதியிருப்பதே அதன் மகிமையை—மண்ணுங்கட்டியின் மகிமையை—பாட்டின் மகிமையை யல்ல—உணர்த்தும். ஆனுல் அந்தப் பாட்டுகளை யெல்லாம் இப்பொழுது சொல்லப்போகிறேனென்று நினைத்து ஏமாறுதீர்கள். வேண்டுமானுல் பாட்டுகளைத் தேடி படியுங்கள். வேறு வேலைதானென்ன? மேற்கோளாம்! மண்ணுங்கட்டியாம்!

நான் இப்பொழுது "மண்ணுங்கட்டி"யைப் பிரயோகித்தது அலட்சியமாகவல்ல. அதன் பெருமையை நீங்கள் மறந்து விடாமலிருப்பதற்கே நடுவில் ஒரு போடுபோட்டேன். அதோடு "மண்ணுங்கட்டி" யென்னும் வார்த்தையை மாத்திரம் மரியாதையாய் உபயோகித்தால் போதாது. மண்ணுங்கட்டி யென்ற பொருளையே கொஞ்சம் பயபக்தியுடன் தான் உபயோகிக்க வேண்டும்.

பண்டித மாளவியா லண்டனுக்குப் போனபோது என்ன கொண்டு சென்றுர் ஞாபக மிருக்கிறதா? அவர் பொன்னையா எடுத்துச் சென்றுர். அவர் எடுத்துச் சென்றது, மண்ணைத்தான். "கங்கை நதிப்புறத்து" மண்ணுங்கட்டிகளையே பார்சல் செய்துகொண்டு போனுர் என்? நீங்கள் யோசித்துப் பாருங்கள்.

ஜெர்மனியில் சில ரசாயன சாஸ்திரிகள் மண்ணையே உணவாக உபயோகிக்க வழிகள் கண்டு பிடித்துக்கொண்டிருக்கிறுர்கள். இன்னும் சிறிது காலத்தில் மண் விலை யேறிவிடும். இப்பொழுதே வேண்டிய அளவு மண்ணுங்கட்டிகளை இரும்புப் பெட்டியிலும் பாங்கிகளிலும் பத்திரப் படுத்தி வையுங்கள். பிறகு கொள்ளை லாபம் கிடைக்கும்.

இது மட்டுமா? இன்னும் ஒரு பெரும் ஆச்சரியமான விஷயம் உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். அதாவது நீங்களும் மண்; நானும் மண். இது உண்மை. கோபம் கொள்வதில் பயனில்லை. இந்த உண்மையையே

"ஊத்தைக் குழியிலே மண்ணெடுத்து"

என்ற பெரும் பாட்டில் பாம்பாட்டிச் சித்தர் என்ற புனைப்பெயரில் நான் இதைப்பாடி யிருக்கிறேன். இந்த ரகசியத்தை ஒருவரிடமும் சொல்லிவிடாதீர்கள். அவரவர் படித்துத் தெரிந்து கொள்ளட்டும்.

நீங்கள் இந்தப் பத்திரிகையைப் படிக்கும்போது உங்கள் தந்தை பார்த்துக் கோபித்துக்கொண்டு "பத்திரிகையாம்! மண்ணுங்கட்டியைப் படிக்கிறது தானே" என்று கூறினுல் என்ன பதில் கூறவேண்டுமென்று உங்களுக்குத் தெரியுமன்றே!

BOOKS OF THE HOUR

	Rs.	A
By Mahatma Gandhi		
Satyagraha in South Africa ...	4	8
Young India—I (1919-22) ...	4	0
Young India—II (1924-26) ...	4	0
A Guide to Health ...	0	12
Neethi Dharma ...	0	8
Indian Home Rule ...	0	8
By C. Rajagopalachar		
Chats Behind Bars ...	0	6
By Romain Rolland		
Mahatma Gandhi—a study ...	0	8
By Mahadev Desai		
Gandhiji in Indian Villages ...	2	0
Gandhiji in Ceylon ...	1	4
By Rajendra Prasad		
Candhiji in Champaran ...	2	8
By Krishna Das		
Seven Months with Mahatma Gandhi ...	3	8
By Richard B. Gregg		
Economics of Khaddar ...	1	0
Gandhiji's Satyagraha (2 Vols.)	2	8
Gandhism & Socialism ...	0	2

Sangu Book Depot

Triplicane, Madras

பகவதி ஜோசியம்

(பாபு)

• “நல்ல ஷமாஷாரம் சொல்றேன். நல்ல ஷமாஷாரம் சொல்றேன்.” என்று சொல்லிக்கொண்டே குடுகுடுப்பாண்டி வீட்டை நோக்கி வந்தான். வாசற்படியண்டை நின்றுகொண்டிருந்த நான் “போடா! காலங் காத்தாலே உன் முகத்திலேயா விழிக்கணும் போடா!” என்று விரட்டினேன்.

“அய்யாவுக்கு கோபம் வருதே” என்று என் முகத்தை உற்று நோக்கினான்.

“தெற்கேயிருந்து ஒரு நல்ல சேதி வருது. உனக்கு ஒத்தன் கெடுதல் நினைக்கிறான். கெட்டுப் போவான்.” என்று ஆரம்பித்தான்.

“சரிதான் போடா! உன் கதையெல்லாம் தெரியும்” என்று அதட்டினேன்.

“சாமி! உங்களுக்கு ஒருவன் பொறந்திருக்கான். நல்லாயிருப்பான்” என்று சொன்னது எனக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. நமக்குக் குழந்தை பிறந்து இன்னும் மூன்று நாட்களாக வில்லை. இதற்குள் இவனுக்கு எப்படிடா தெரிந்தது என்று யோசித்தேன். எனது ஆச்சரியத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் மௌனமாயிருந்தேன்.

“அம்மாங்களுக்குத்தான் கொஞ்சம் ஆவாது. ஆனால் பயமில்லே. பகவதி நல்லது செய்வாள்” என்று முடித்தான். இதைக் கேட்டதும் எனது ஆச்சரியம் அதிகரித்தது. உண்மையை அறிய விரும்பி,

“உனக்கு எப்படிடா தெரிந்தது?” என்று கேட்டேன்.

“நம்பளுக்கு பகவதி சொல்லுவா” என்றான். எவ்வளவு கேட்டும் இந்தப் பதிலைத் தவிர வேறு ஒன்றும் வரவில்லை.

“சாமி! நீங்க கட்டிக்கிழிச்ச கந்தை ஒண்ணு கொடுங்கோ. பகவதி நல்லது செய்வாள்” என்று மன்றாடினான்.

சத்தம் பொறுக்க மாட்டாமல், உள்ளே சென்று மூன்று வருடங்களுக்குமுன் தைத்த ஒரு ஷர்ட்டை (இப்பொழுது போதவில்லை) எடுத்து வந்து கொடுத்தேன். அதை வாங்கிப் பிரித்துப் பார்த்து, உதரித் தோளில் போட்டுக்கொண்டு வெளிக் கிளம்பினான். குடுகுடுப்பைச் சத்தமும் குறைந்தது.

சுமார் பதினைந்து தினங்கள் கழிந்தன. நான் வேட்டகத்திலிருந்து திரும்பி வந்த நாள். எனது தோட்டக்காரன் நான் குடுகுடுப்பைக் காரனுக்குக் கொடுத்த ஷர்டுபோல் ஒன்று அணிந்துக் கொண்டிருந்தான். சற்று உற்று கவனித்ததில் அந்த ஷர்டுதான் என்று நிச்சயமாகப் புலப்பட்டது.

“டே குப்பா! இந்த சொக்காத் துணி எங்கேடா வாங்கினே? புது மாதிரியா இருக்கேடா” என்று கேட்டேன்.

“இல்லீங்க சாமி! பழசுதாங்கோ. கடைத்தெருவிலே வாங்கினேங்க” என்றான்.

“கடைத்தெருவிலே பழைய ஷர்டு கூடவா விக்கிறாங்க” என்று கேட்டேன்.

“இல்லீங்க! பழந் துணிங்கள்ளாம் கொண்ணாந்து விக்கிறாங்க சாமி! அவங்க கிட்டே சில சமயங்கள்ளே நல்ல துணி கிடைக்கிதுங்க. ரொம்ப சரசமாக் கொடுக்கிறாங்க?” என்றான்.

“சரி! போ!” என்றேன். ஆனால் வேலைக்காரன் கொஞ்சம் தயங்கினான்.

“என்னடா?” என்றேன்,

“இல்லீங்க. சின்னய்யருக்கு என்ன பேரு வச்சாங்கன்னு கேக்கணும்னு ஆசைங்க. ஏதாவது நினைச்சுக்கப் போறீங்களோன்னு தயங்குறேங்க” என்றான்.

இவனுக்குக்கூடவா இவ்வளவு பாசம்! என்று நினைத்துக்கொண்டே, “இது தானா? மணின்னு பேரு வச்சிருக்காங்கடா” என்றேன். “ரொம்ப நல்ல பேருங்க! மணியாட்டமா இருக்கணும் சாமி!” என்று சொல்லிவிட்டு தன் வேலையைக் கவனிக்கச் சென்றான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு மறுபடியும் குடுகுடுப்பாண்டி என் வீட்டிற்கு வந்தான். பழையபடியும் “நல்ல ஷமாஷாரம் சொல்றேன்” என்று தனது கதையை ஆரம்பித்தான். இப்பொழுது என்ன சொல்லப் போகிறான் பார்ப்போம் என்று நினைத்தேன்.

“சின்னய்யிரு! மணியய்யிரு. மணியாட்டமா யிருப்பாரு” என்று ஆரம்பித்தான்.

“எந்த அய்யரு! இங்கே மணியய்யரும் கிடையாது. சின்னய்யரும் கிடையாது” என்றேன்.

“உங்க மவன் சாமி! ஊரிலே இருக்காரே அவுங்க சாமி” என்று ஏதோ மேலே சொல்ல ஆரம்பித்தான். உடனே ஞாபகம் வந்தது. உண்மை விளங்கிற்று.

“டா! திருட்டுப் பயலே! உனது பகவதி ஜோஸ்யம் தெரிந்ததுடா” என்று உள்ளே போய்த் தோட்டக்காரனை அழைத்துக்கொண்டு வந்தேன். ஆனால் குடுகுடுப்பாண்டியைத் தான் காணவில்லை. குடுகுடுவென்று ஓடி விட்டான் போலிருக்கிறது!

மகாத்மா காந்தி எழுதிய

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	....	0	0	6
ஹரிஜனத் தொண்டு	....	0	0	6
ஹரிஜனப் பணி	....	0	0	6
ஹரிஜன விமோசனம்	....	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை

பைக்கிராப்ட்ஸ் ரோட்,

திருவல்லிக்கேணி, சென்னை.

சுதந்திர வாழ்வு

பூபாள ராகம்

1. சுதந்திர வாழ்வென் பிறப்புக்கோர் உரிமை
தூய வகிம்சா நெறியே யெம்பெருமை
இதந்தருந் தமிழ்மொழி எமது தாய்மொழியே
எழில் தமிழ்க்கலை யெம்முன் னேற்றத்தின் வழியே
பதந்தரு மெய்ஞ்ஞானக் கீதை யெம் நூலே
பாரினி லிதற்கிணையே தி துபோலே
விதவிதமுறும் பெருந்தொழி லெங்கள் தொழிலே
விசித்திரக் கைத்தொழில் விளங்குமோரெழிலே!

2. வஞ்சகர் செய்கின்ற வம்புகட் கஞ்சோம்!
வலிகுன்றி யுலகினில் மாசொடு துஞ்சோம்!
பஞ்சைபோ லடிமைத்தொழில் புரிந் துண்ணோம்
பறையர் புலையரெனப் பலசாதி எண்ணோம்
கெஞ்சுதலெனும் வீண்கேவலங் கொள்ளோம்
கீழாமடிமையென்று எவரையு மெள்ளோம்
துஞ்ச சேர்ந்திடினும் சொல் சத்தியம் பூண்போம்!
தூவென் றடிமைவிட்டு சுகத்தையே காண்போம்.

3. உழவர்கள் வாழ்வு உயர்ந்திடும் பூவில்
உயர்பெரு வேதம் மிளிர்ந்திடும் பாவில்
அழகுறப் பலதொழில் யாவருஞ் செய்வோம்
அகத்தின் தீமைதன்னை யகற்றி யாமுய்வோம்
மழைகுறைவின்றி ஒழிந்திடும் பஞ்சம்
மாளாத இன்பமே ஆகுமென் னெஞ்சம்
பழையன நீக்கிப் புதியன வோங்கும்
பசியெனும் பிணிகள் பறந்தினி நீங்கும்.

— இராமலிங்கம்பட்டி - கு. அ ஆறுமுகன்.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

(கிளேஸ் காகிதத்தில் அழகான பதிப்பு)

வ. வே. சு. அய்யர் எழுதிய

குருகோவிந்த சிங்கன்

(சீக்கியர்களின் வீரத்தலைவன்)

விலை அணா 4 தபாற் செலவு வேறு:

சுதந்திரச் சங்கு காரியாலயம்

திருவல்லிக்கேணி, சென்னை.

'காந்தாரி' டாக்டர்

சீமைக்குப் போகும் கப்பல்களில் கல்கத்தாவிலிருந்து சுத்தமான கங்கா ஜலம் கொண்டு போவது வழக்கமாம். சீமை செல்லும்வரையில் இந்த ஜலம் மிக நன்ருயிருக்கிறதாம். சீமையிலிருந்து வரும் கப்பல்கள் அங்கிருந்து ஜலம் கொண்டுவந்தால், பம்பாய் வருவதற்குள் நாறிப் போகிறதாம். இதற்குக் காரணம் என்னடா வென்ருல், டாக்டர் நெல்ஸன் என்பவர் ஒரு கயிறு விட்டிருக்கிருர்.

கங்கா ஜலத்தில் நிறைய அசுத்த வஸ்துக்கள் எறியப்படு கின்றனவாம். சாக்கடைத் தண்ணீரின் குணங்கள் அதற்கு இருக்கின்றனவாம். சாக்கடைத் தண்ணீரில் பூச்சிகளைக் கொல்லும் சத்து இருக்கிறதாம். ஆகையால், கங்கா ஜலத்தின் அபரிமித குணங்களுக்கு அதில் உள்ள அசுத்தங்களே காரணம் என்று நெல்ஸன் கூறுகிருர். இந்தக் கோணல் வாதத்துக்கு, "ஸண்டே டைம்ஸ்" பத்திரிகை ஒரு சரியான சவுக்கடி கொடுத்திருக்கிறது.

ஒரு தங்கக் கட்டியை எடுத்து முகட்டுப் பூச்சிமீது மொத்தினுல் அது செத்துப் போகிறது. ஒரு ஈயக்கட்டியால் மொத்தினுலும் முகடு சாகத்தான் சாகும். இதனுல் தங்கக் கட்டியும் ஈயக்கட்டியும் ஒரே உபயோகமானவை என்று முடிவு கட்டலாமோ? ஏதோ ஒரே ஒரு குணத்தில் இரண்டு சாமான்களுக்குள் ஒற்றுமை யிருக்குமானுல், இரண்டும் சகல விதத்திலும் சமமே என்பது அசட்டுத்தனமாகும்.

கங்கா ஜலத்துக்கு உள்ள நல்ல குணத்தைக் கண்டு, இப்படிக் காந்தாரித் தனமாக முடிவு சொல்லலாமோ இந்த டாக்டர்? லண்டனில் உள்ள தேம்ஸ் நதியில் வேண்டுமானுல், லண்டன் சாக்கடை பூராவையும் திருப்பிவிட்டுப் பார்க்கட்டுமே; அதனுல், அது கங்கா ஜலமாகிவிடுமா? தேம்ஸ் நதி இப்பொழுதே நாற்ற மடித்துக் கிடப்பதாகக் கேள்வி. சாக்கடைத் தண்ணீரையும் விட்டால், வேறு வினை வேண்டியதில்லை. கங்கைத் தண்ணீரின் இயற்கைப் பெருமையை, இந்த மாதிரி பேச்செல்லாம் ஒரு சிறிதுகூட அசைக்க முடியாது என்பதை இந்த டாக்டர் உணரப்போவ தெங்கே.

18712

'சுகமாம்! துக்கமாம்!'

மிருகங்களின் சந்தோஷத்தை எப்படி அளந்து கூறுவது என்று தெரியவில்லை. காட்டில் இருக்கும் பூனையைவிட நம் வீட்டிலுள்ள பூனை சந்தோஷமாய் வாழ்கிறதென்று சொல்ல முடியுமா? மரத்திலுள்ள ஓநாயைவிட நம் மடியில் விளையாடும் நாய்க்குட்டிதான் சந்தோஷமாய் இருக்கிறதென்று கூற முடியுமா? ஆனால் சின்னஞ் சிறிய ஆட்டுக்குட்டியோ, கன்றுக்குட்டியோ துள்ளி விளையாடும்போது அதன் முகத்தில் களிக்களை யிருப்பதாகத்தான் நமக்குத் தோன்றுகிறது. ஆனால் வயதாகிவிட்டால் அவைகளுக்குக்கூட உலகைப் பற்றிய வேதாந்த ஞானமும் ஏற்பட்டுவிடுகிறதா என்ன? அடடா! இந்தப் பசு கொஞ்சமாவது உணர்ச்சி காட்டாமல் அசை போட்டுக்கொண்டு சாந்தமாக அமர்ந்திருக்கிறதே! ஆனால் உண்மையில் பசுவுக்கு வயதானதால் பிரமாதமாக அறிவு ஏற்பட்டு விடவில்லை. அது வேதாந்தியுமல்ல. வயதாக ஆக மிருகங்களுக்கு ஞானோதயம் ஏற்பட்டுவிடுவதும் இல்லை. ஓட்டப் பந்தயத்தில் ஜெயித்து விட்டால் ஜெயித்த குதிரை சந்தோஷமாகக் கனைப்பதாகச் சொல்கிறார்கள். அது பொய்! சந்தோஷமாவது, மண்ணாங்கட்டியாவது! ஆரோகணித்துச் செல்லும் மனிதனுக்கு எவ்வளவுக் கெவ்வளவு இன்பம் தருகிறதோ அத்தனைக்கத்தனை அந்தக் குதிரை துன்பம் அனுபவிப்பதுதான் உண்மை.

மிருகங்களின் சந்தோஷ வாழ்வைப் பற்றி நாம் கொண்டுள்ள கருத்துக்கள் தப்பிதமானவை யென்பது ஒருபுறமிருக்கட்டும். நமது சகோதர மனித ஜாதியின் சந்தோஷத்தைத் தான் அளவெடுத்து அறிந்துகொள்ள நம்மால் முடிகிறதா என்றால் அதுவும் முடிகிறதில்லை. உதாரணமாக இரண்டு பேர்களை எடுத்துக்கொள்வோம். "மீண்டும் நான் சின்னப் பையனாக மாறி பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். உலகத்தில் எவ்வளவு இன்பம் இருக்கிறது தெரியுமா?" என்கிறான் ஒருவன். "போதுமப்பா இந்த வாழ்வு! நாளை ராத்திரி படுக்கையிலேயே பரலோகப் பிராப்தியடைந்தால் நான் அதிர்ஷ்டசாலி!" என்கிறான் இன்னொருவன். என்ன வித்தியாசமான எண்ணங்கள் பார்த்தீர்களா?

உலகில் எவ்வளவோ பெரியார்கள் சந்தோஷமாகக் காலங் கழித்தார்களென்று கேள்விப்பட்டிருக்கிறோம். தேச சஞ்சாரம் செய்வதிலும், புத்தகங்களைப் படிப்பதிலும், புத்தகங்களை எழுதுவதிலும், நல்ல ஆகார வகைகளிலும், நாடகம் ஆடுவதிலும், குழந்தைகளோடு கொஞ்சுவதிலும் விதம் விதமாக சந்தோஷம் அனுபவித்தவர்கள் உண்டு. ஆனால் அவர்கள் கொஞ்சங்கூட பயமின்றி சாவை வரவேற்பதற்கும் தயாராயிருந்ததுண்டு. சாவை அலட்சியமாக எண்ணுபவன் வாழ்வையும் அலட்சியமாக எண்ணுவான் என்பது ஒரு கட்சி.

ஆனால் சாவு சிலருக்குப் பயத்தையுண்டாக்குகின்றது. இந்த லோகத்தின் பச்சைப்பசேலென்ற காட்சிகளை விட்டுப் போவதற்கு மனம் வருவதில்லை. மீண்டும் பால்ய வயதையடைந்து சந்தோஷமாக வாழவேண்டுமென்று பலர் ஆசைப்படுகின்றனர். ஆனால் வேறு சிலர் தங்கள் பள்ளிக்கூட வாழ்க்கை நாட்களைத் திட்டுகின்றனர். பள்ளிக்கூடங்களையெல்லாம் தகர்த்துத் தரை மட்ட மாக்க வேண்டுமென்று சொல்கின்ற அறிஞர் பலர் உலகிலுண்டு. சிறு வயது சந்தோஷ மென்கின்றனர் சிலர். துக்க மென்கின்றனர் இன்னொரு சாரார். ஆகவே எதைச் சரியான அபிப்பிராயமெனக் கொள்வது?

ஆனால் உலகில் 'சந்தோஷமாக' வாழ்வதற்கு ஒரே ஒரு வழிதானிருக்கிறது. நமக்கு எவையெவை இன்பம் தருகின்றனவோ அவ்வகளை ஞாபகத்தில் எப்போதும் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். எவை நமக்குத் துக்கமயமாகத் தோன்றினவோ அவைகளை அவ்வப்போது மறந்துவிட வேண்டும். தற்கொலை செய்துகொள்ள முனைந்திருப்பவனின் துக்கத்தையும், சுவர்க்க போகத்தில் இருப்பவனின் சந்தோஷ வாழ்வையும் தாரதம்யம் பார்க்கக் கொண்டிருக்கக் கூடாது. உலகத்தில் எவ்வளவு சந்தோஷ மிருக்கின்றதோ அவ்வளவு விசனமும் கூடவே இருந்துகொண்டு தானிருக்கிறது. ஆனால் உலகத்தின் வருங்கால வாழ்வைப்பற்றி எண்ணும்போது தான் பயமாயிருக்கிறது. விஷப் புகைகளைக் கொண்டு யுத்தம் செய்யப் போகிறார்களாமே— அடடா அத்தகைய உலகத்தைவிட நரக லோகம் எவ்வளவோ சுகமாயிருக்குமென்று தோன்றுகிறதே!

புட்டி விலை அணா 12. மேற் செலவு வேறு.

திட்டம் போட்டு வேலை செய்தல்

(ஆயில்யம் எழுதியது)

சில தொழில்களில் மெஷின்களை உபயோகிக்கக் கூடாதென்று ஜர்மானிய சர்க்கார் தடை செய்திருக்கிறது. இத்தாலியில் 1933ம் வருஷ ஆரம்பத்தில், "இனி யாராவது புதிய இயந்திரங்கள் வாங்க வேண்டுமாயின் சர்க்கார் உத்தரவைக் கேட்டுக்கொண்டு தான் செய்யவேண்டும்" என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அமெரிக்காவில் ரூஸ்வெல்ட் அக்கிராஸனாதிபதியாக வந்த பிறகு "இனி பெரிய தொழிற்சாலைகள் இயந்திர உதவிகொண்டு பிரும்மாண்டமாக வளருமாறு விட்டுவிடக்கூடாது" என்ற கொள்கை அமுலுக்கு வந்திருக்கிறது. ஜனங்களின் தேவைக்கு அதிகமாக சாமான்கள் தயாரிக்கப்பட்டால் அதனால் சாமான்களின் விலை குறைவது மட்டுமின்றி, நெஞ்சை யிறுக்கும் போட்டா போட்டியும், தொழிலாளிகளின் சம்பளங்களும் குறைவுபடுத்த வேண்டி யிருக்கிறது. இவ்வாறு விளையும் வியாபார மந்தத்தைத் தடுப்பதற்கு இரண்டு வழிகளுண்டு.

1. சாமான்களை அதிகமாக உபயோகிக்குமாறு ஜனங்களைத் தூண்டலாம்.

2. அல்லது சாமான்களின் உற்பத்தி யளவைக் குறைக்கலாம்.

இந்த இரண்டு வழிகளைத் தவிர பொருளாதார மந்தத்தைப் போக்க வேறு சிறந்த வழிகளில்லை. ஒரு தேசத்துக்கு பொருளாதாரத் திட்டம் வகுப்பதானாலும் இந்த இரண்டு முறைகளையும் ஆலோசித்தே திட்டம் வகுக்க வேண்டும்.

ருஷியாவில் ஒரு ஐந்து வருடத் திட்டம் போட்டு (1925-32) வேலை செய்தார்கள். புதிய நகரங்களையும், புதிய தொழிற் சாலைகளையும், மின்சார உற்பத்தி நிலையங்களையும், ரெயில்வேக்களையும் சிருட்டிப்பதென்று அந்தத் திட்டத்தில் கண்டிருந்தார்கள். நிபுணர்களைப் பிறநாடுகளினின்றும் வரவழைத்து ருஷிய சர்க்கார் வேலை செய்தது. ஏராளமாகப் பொருட் செலவு, தேக சிரமம் இவைகளால் ஐந்து வருடத் திட்டம் வெற்றிகரமாக முடிவு பெற்றது. உடனே அடுத்தாற்போல இன்னொரு ஐந்து வருடத் திட்டத்தை வகுத்து ருஷியா இப்பொழுது வேலை செய்து வருகிறது.

திட்டம் போட்டு ஒரு துரைத்தனம் வேலை செய்வது என்றால் கட்டாயம் சில முதலாளிகள் மீதோ இதரர்கள் மீதோ அமுல் நடத்தித்தான் ஆக வேண்டியிருக்கும். தேசத்தின் பெரும்பாலான மக்களின் நன்மையை உத்தேசித்து மிகச் சிறியதான ஓர் கோஷ்டி மீது அமுல் நடத்துவதில் தப்பிதமில்லை. கம்பெனிகளில்கூட இத்தனை டாலருக்குமேல் யாருக்கும் சம்பளம் கொடுக்கக் கூடாதென்று அமெரிக்க அரசாங்கம் இன்று சுற்றறிக்கை விட்டிருப்பது கவனிக்கத்தக்க விஷயம். பொருளாதாரத் திட்டம் போட்டு ஒரு துரைத்தனம் வேலைசெய்ய முற்பட்டால் பொது ஜனங்களின் வாழ்வை அதாவது பொது மக்களின் ஊண், உடை, முதலியவற்றில் கூட, சர்க்கார் உத்தரவுப்படி நடக்க வேண்டுமென கட்டுப்படுத்த வேண்டி யிருக்கலாம். இந்த விஷயத்தில் ருஷியாவில் முதல் ஐந்து வருடத் திட்டத்தின் கதை கவனிக்கத் தக்கது.

1929-ல் ருஷியாவில் பிரமாதமாக சாமான் பஞ்சம் ஏற்பட்டிருந்தது. என்ன விலை கொடுத்தாலும் சில சாமான்கள் கிடைப்பதா யில்லை. கிடைப்பவைகளும் நல்ல சாமான்களாகவுமில்லை. ஆகவே பொது வுடைமை இளைஞர்கள் ஒருபிரசாரம் செய்தனர். ஆடம்பரமான ஆடைகளை யணிவது 'பூர்ஷ்வா'த்தனம் என்று கூறினர். 'பூர்ஷ்வா'த்தனம் முதலாளிகளின் வாழ்வு என்ற எண்ணமும் அதைத் தொலைக்க வேண்டுமென்ற ஆத்திரமும் தேச மக்களின் உள்ளத்தில் இருந்தது. ஆகவே ஜனங்கள் ஹாட் அணிவதைக் கூட முதலாளித் திமிர் என்று நினைத்து ஒதுக்க ஆரம்பித்தார்கள். இந்தப் பிரசாரத்தின் பயனாக தேசத்தில் எளிய ஆடையின் மீதும் மலிவான சுலப வாழ்வின் மீதும் ஓர் மோகம் ஏற்பட்டது. 'ஷோக்' வாழ்வின் மீது வெறுப்பு ஏற்பட்டது, பரந்த ஒரு நாட்டின் முன்னேற்றத்தை யுத்தேசித்து ஷோக்கான ஆடைகளைத் தியாகம் செய்ய வேண்டியது உத்தமமான பிரஜைகளின் கடமையல்லவா? இதை ருஷிய மக்கள் செய்தனர். சாமான் பஞ்சம் ஏற்பட்ட காலத்து அந்த சாமான்களின் மீது ஜனங்களுக்குள்ள மோகத்தைக் குறைத்தது நல்ல சாமர்த்தியமான முறையாகும்.

ஆனால் இதே சமயத்தில் ருஷிய அரசாங்கம் அழகான வஸ்துக்களின்மீது ஜனங்களுக்கு அவா யேற்படுமாறு தூண்டத் தொடங்கிற்று. ஆங்காங்கு நல்ல பூந் தோட்டங்களையும், விளையாட்டு மைதானங்களையும், அழகான கட்டிடங்களையும், தியேட்டர்களையும், சங்கீதச் சபைகளையும் அமைத்துத் தந்தது. இந்த ஏற்பாட்டினால் ஜனங்களுக்கு பொழுது போவது சுலபமாயிருந்ததோடு, விலை அதிக மில்லாமல் சுகம் அனுபவிக்க வழிகளுண்டு என்பதும் தெரிந்தது.

இன்றைக்கு ருஷியாவில் இரண்டாவது 5 வருட திட்டம் நிறைவேற்றப் பட்டு வருகிறதே, அதன்படி ஆடைகளும், பூட்ஸுகளும், ஹாட்டுகளும் ஏராளமாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. எல்லாம் யாருக்காக? அந்த நாட்டு மக்களுக்காகத்தான். உலகில் சிறந்த புத்தகங்களை யெல்லாம் ருஷிய மொழிகள் தர்ஜமா செய்து மலிவான புத்தகங்களை வெளியிடுகிறார்கள். பத்து வருடங்களுக்கு முன்னே தங்கள் தேசம் இருந்த நிலைமையும் இன்றைக்கு தேசம் அடைந்துள்ள அபிவிர்த்தியையும் ருஷியர் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கின்றனர்.

ஜனங்களுடைய தேவைகளென்னென்ன என்பதை அறிந்து அதற்கேற்ப ஜனங்களின் உதவி கொண்டே ஓர் திட்டத்தை வகுத்தால் தான் கடைசியில் வெற்றி கிட்டும். இந்த இரகஸியத்தை ருஷியா நன்றாக உணர்ந்துக் கொண்டிருக்கிறது. ஏராளமாக சாமான்களை உற்பத்தி செய்வதும், டாலர்களைக் குவிப்பதும் தான் நாகரிகமென்று நினைத்திருந்த அமெரிக்காவும் தனது அபிப்பிராயங்களை இப்போது மாற்றிக்கொண்டு வருகிறது. இவ்வாறு ஒருவகைத் திட்டம் போட்டு பொருளாதார வாழ்வை விருத்தி செய்யும் காலம் நமது பாரத நாட்டில் என்றைக்கு வரப் போகிறதோ?



நாதஸ்வரம் ராஜரத்தினம் பிள்ளை

(சங்கு. ஸுப்ரஹ்மணியன் எழுதியது)

நாதஸ்வரமா, நாகஸ்வரமா, நாயனமா, என்ன பெயரா யிருந்தாலென்ன அது தமிழ்நாட்டின் சிறப்பான வாத்தியம். வேறு எந்த தேசத்தான் இந்த வாத்தியத்தில் பயிற்சி பெற்றாலும் தமிழன் இந்த வாத்தியத்தில் அடைந்துள்ள உன்னதத்தை அடைவதற்கு பல நூற்றாண்டுகள் பிடிக்கும். தமிழ்நாட்டின் தனி வாத்தியமென்ற ஒரு புகழோடு நாதஸ்வரம் நின்றுவிடவில்லை. இன்றைக்குக் கர்நாடக சங்கீதத்துக்கு சாகா வரம் வாங்கித் தந்த பெருமை தியாகர், தீட்சிதர், சியாமா சாஸ்திரி முதலிய சாகித்திய வித்வான்களுக்கும், இந்த நாட்டை அவ்வப்போது அலங்கரித்து வரும் நாதஸ்வர வித்வான்களுக்குமே உரியது. இந்த துளைக்கருவி தமிழ்நாட்டில் தோன்றி யிராவிட்டால் கர்நாடக சங்கீதத்துக்கு இத்தனை சோபை ஏற்பட்டிருக்குமா வென்பது சந்தேகமே.

'இசை இன்ப மூட்டுவதில் புல்லாங் குழலையும் விஞ்சியது நாதஸ்வரமே' என்று ஓர் மேனாட்டு ரஸிகர் சொன்னார். அவர் சொல்லியது ஓரளவு உண்மைதான். சாதாரண மக்களின் மனத்திற்குக்கூட ரஞ்சனை தரும் குளுமையும் கம்பீரமும் இந்த வாத்தியத்திடத்தி லிருப்பதால்தான், பத்து மைல் பதினைந்து மைலைக்கூடப் பார்க்காமல் கிராமவாசிகள் ஓர் இரவுக் கச்சேரி கேட்பதற்காக ஓடுகின்றனர். கேட்பதற்கு எவ்வளவு சுவையாயிருக்கிறதோ அத்தனைக் கத்தனை கடினம் வாத்தியத்தைக் கையாள்வதும். தவறாகக் கையாள்பவர் கையில் இந்த வாத்தியம் அகப்பட்டுக்கொண்டு விட்டாலோ சங்கீதமே கொலை செய்யப்பட்டு விடுவதுபோலத் தோன்றும். ஒருவனுடைய வித்வத்தை உள்ளது உள்ளபடி தராசுபோல நிறுத்து வெளிப்படுத்தக்கூடிய வாத்தியம் இது ஒன்றுதான்.

வாழையடி வாழைபோலத் தமிழ் நாட்டில் இந்த வாத்திய வித்வான்களின் பரம்பரை வந்து கொண்டிருக்கிறது. அப்பியாசத்தினாலும் அஸுர சாதகத்தினாலுமே சில வாத்தியங்களில் தேர்ச்சி பெற்றுவிட முடியும். ஆனால் இந்த வாத்தியத்தில் மட்டும் அவ்வாறில்லை. 'விளையும் பயிர் முளையிலே' என்ற கருத்து நாதஸ்வர வித்வத் விஷயத்தில் முற்றிலும் பொருத்தமானது. சிறந்த நாயனக்காரர்கள் அனைவரும் பிறப்பிலிருந்தே சாமார்த்தியவான்களாக இருந்திருப்பதே இதற்குச் சான்று. அத்தகைய பிறவிகளில் திருவாவடுதுறை ஆதீன வித்வான் ராஜரத்தினம் பிள்ளையும் ஒருவர்.

அவரது எட்டாவது வயதிலிருந்தே அவர் வெகு அழகாக இந்த வாத்யத்தைக் கையாண்டு வந்திருக்கிறார். இப்போது வயது முப்பத்தைந்து இருக்கலாம். ஒற்றை நாடியான சரீர முடையவர். நட்புக்கு உகந்த ஸரஸ குணமும், பெரியவர்களிடத்தில் மரியாதை காட்டும் மனப்பான்மையும் உடையவர். குண விசேஷங்களும், வித்வத் திறமையும் ஒருங்கே சேர்ந்திருப்பது அரிது அல்லவா?

வீட்டில் நமது பெரியார்களை விசாரித்தோமானால் முப்பது வருடங்களுக்கு முன்னே 'திருமருகல் நடேசன்' என்ற ஒரு நாயனக்காரரைப் பற்றிப் புகழ்மொழி கூறுவார்கள். அந்த பிரஸித்தி பெற்ற வித்வான் நமது ராஜரத்தினத்துக்கு தாய் மாமன். அவர் திருவாவடுதுறைக்குக் குடியேறிய போது இந்தக் குழந்தையையும் உடன் கூட்டி வந்துவிட்டார். ஆனால் குழந்தையின் மூன்றாவது வயதிலேயே நடேசன் உலகை நீத்துச் சென்றுவிட்டார். சங்கீதக் குடும்பத்தில் வளர்ந்த இந்தக் குழந்தையைச் சும்மா வைத்திருப்பார்களா? ஐந்து வயதுக்குள் வர்ணம் வரையில் ராஜரத்தினத்துக்கு சிட்சை ஆகிவிட்டது. பிறகு பிடில் வித்வான் திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் இந்தப் பாலனுக்குப் பாடம் சொல்லித் தந்தார். தமிழ் நாட்டில் சங்கீதச் சக்கிரவர்த்தியாக விளங்கிய கோனேரி ராஜபுரம் வைத்தியநாத பாகவதரின் வாய்ப்பாட்டின் மீது இப்பையனுக்கு அபார மோகம். ஆகவே அவரிடம் ஒன்றரை வருஷகாலம் பையனுக்கு பயிற்சி கிடைத்து,எட்டு வயதுக்குள் வேண்டிய ஞானம் ஏற்பட்டு விட்டது. நடேசனின் வம்சத்தில் வந்த இந்தச் சிறுவனை வாய்ப் பாட்டு வித்துவானாகவே ஆக்கிவிடுவதென குடும்ப நண்பர்கள் எண்ணிக்கொண் டிருந்தனர். அந்தச் சிறு வயதிலேயே தனது தமக்கை தயாளம்மாளோடு ஆங்காங்கு சென்று

இந்தச் சிறுவன் கச்சேரிகளும் செய்ததுண்டு.

ஆனால் ராஜரத்தினத்துக்கு ஓர் இரவு ஏற்பட்ட சொப்பனம் வாழ்க்கையிலேயே ஒரு மாறுதலை உண்டாக்கிவிட்டது. அன்று சொப்பனத்தில் மாமன் தோன்றி 'வாத்யத்தை எடுத்து வா' என்று சொன்னது போலிருந்ததாம். பையன் திடுக்கிட்டு விழித்தான். மறுமாதத்திலிருந்தே பையன் வாய்ப்பாட்டை விடுத்து நாதஸ்வர வாத்தியத்தை அப்பியஸிக்கத் தொடங்கினான்.

திருவாவடுதுறை ஆதீனத்துக்கு வந்து, மன்னார்குடி சின்னப்பக்கிரி, செம்பனார்கோவில் ராமசாமி முதலிய கந்தருவப் பிறப்பினர் வாத்தியங்களை வாசிக்கும்போதெல்லாம் இந்தச் சிறுவன் ஓர் மூலையில் நின்று கொண்டு கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருப்பான். மறுநாள் வீட்டில் அதே 'பிடி'களைத் தன் வாத்யத்தில் பிடித்துப் பயிற்சி செய்துகொள்வான். இந்தச் சிறுவன் நாளுக்கு நாள் வித்வத்தில் உயர்ந்து வருவதைக் கண்டு திருவாவடுதுறை ஆதீனத்தில் மணியமாயிருந்த பொன்னு பிள்ளையவர்கள் வியந்து இப்பையனை ஆதீனத்தலைவரான அம்பலவாண தேசிகரிடம் சிபார்சு செய்தார். மாமன் நடேசனின் 'ஆதீன சேவகம்' ராஜரத்தினத்துக்குக் கிடைத்துவிட்டது. அன்றைக்கிருந்து இன்றைய தேதி வரையில் கொஞ்சமேனும் புகழ் குன்றாது ராஜரத்தினம் சங்கீத உலகில் இருந்து வருகிறார். சேதுபதி சமஸ்தானத்திலும், மைசூர் சமஸ்தானத்திலும், திருவிதாங்கூர் சமஸ்தானத்திலும் தமது திறமையைக் காட்டிப் பரிசுகள் பலதடவை பெற்றிருக்கிறார். சமஸ்தானங்களின் பரிசுகளைவிட சாதாரண மக்களிடம் புகழ் பெறுவதுதான் கடினம். அதுவும் ராஜரத்தினத்துக்குக் கிடைத்திருப்பதுதான் விந்தை.

பைரவி, தோடி, முதலிய கன ராகங்கள் பெரிய நாதஸ்வர வித்வான்கள் எல்லாரிடத்திலுமே நன்றாய்த்தானிருக்கும். ஆனால் கானடா, பியாகடை, சகானா, ஷண்முகப்பிரியா, நடபைரவி முதலிய ராகங்களை ராஜ ரத்தினத்திடத்தில்தான் கேட்க வேண்டுமென்பார்கள். பிள்ளையவர்களின் சாமர்த்தியத்தைப் பூர்ணமாக அநுபவிக்க வேண்டுமானால் அவரை நல்ல ரஸிகர் முன்னிலையில் நிறுத்தி வைத்து வாசிக்கச் சொல்லவேண்டும். நல்ல ஸதஸ் மட்டும் கிடைத்து விட்டால், கற்பனைகளை அடுக்கடுக்காய் அவர் சிருட்டிக்கும் ஜோடனையை அப்போது நாம் கட்டாயம் காணுவோம்.

தியாகப் பிரும்மத்தின் கிருதிகள் இப்போது எல்லா சங்கீத வித்வான்களிடமும் அதிகப் பழக்கத்தில் இருந்துகொண்டிருக்கிறது. தீட்சிதர் கிருதிகளையும் சிறப்பாக வாசித்துக் காட்டுவதில் ராஜரத்தினத்துக்கு அந்தரங்கமான ஓர் அன்பு இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். நிற்க,

நாதஸ்வர வாத்தியத்தில் ரம்யமாகக் காற்றுக்கொடுத்து வாசிக்கின்ற வித்வான்கள் உண்டு. அந்த நாதத்தின் இனிமையில் ரஸிகர் மெய்ம்மறந்து போய்விட நேரிடுகின்றது. சாஸ்திர சம்மதமாக ஸ்வரஸ்தானங்களும், பிர்க்காக்களும், குழைவுகளும் கொடுக்கப் படுகின்றனவா வென்று கவனிக்க இடந்தராமல் ரஸிகரை கேவலம் நாதத்திலேயே மயக்கிவிடத்தக்க வித்வான்கள் பல நண்டு. ஆனால் ராஜரத்தினமோ அத்தகைய மாயாஜாலங்களைச் செய்வதில்லை. காது கொப்புளிக்கும் வண்ணம் விர் விர்ரென்று சத்தப்படுத்தி பயமுறுத்துவதுமில்லை. பூர்ணமான சாஸ்திர வழியை சாதாரண மக்களும் உணர்ந்து ரஸிக்கும் முறையில் ரஞ்சனையோடு வாசித்துக் காட்டுவதில்தான் அவருக்கு இஷ்டம். இவருடைய வழிகளும் பிடிகளும் கர்நாடக சங்கீதத்தில் என்றென்றும் இருக்க வேண்டியவை. இவரிடம் வேறு யாராவது பயிற்சிபெற்று வருகிறார்களோ என்னவோ நாமறியோம். இவர் எப்படி கோனேரிராஜபுரம் வைத்தியனாதய்யர் முதலியவர்களின் பிரதித்தொனியாக இருக்கின்றாரோ அம்மாதிரி சங்கீத பாரம்பர்யம் வாழ்வதற்காக சில பேரைத் தயார் செய்யவேண்டியது இவரது கடமையாகும். நாதஸ்வர வாத்தியத்துக்கு இன்றியமையாதது தேக சவுக்கியம். பிறப்பிலேயே இவர் பூஞ்சையான சரீரமுடையவர். ஆகவே வெகு ஜாக்கிரதையாக உடல் நலத்தையும் இவர் காப்பாற்றி வரவேண்டுமென்பது நமது விருப்பம். ஏனெனில் இவருடைய வாழ்வு இவருடையது மட்டுமன்று. இவருடைய உடலின் மீது தமிழ் நாட்டுக்கும் கர்நாடக சங்கீதத்துக்கும் ஓர் பாத்யதை இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்வாராக!

ராம் மோஹனுடைய

வட இந்தியா யாத்ரா ஸ்பெஷல்

(பதினேன்றாவது யாத்திரை)

1934-ம் வருஷம் ஏப்ரல்மீ 9உ

சென்னையைவிட்டுப் புறப்படும்.

கீழ்க்கண்ட இடங்களுக்குப் போகும்.

கால விவரம்

10 ஹரிஹர் (துங்கபத்ரைநதி)
11 கோலாப்பூர் (ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஸ்தலம்)
12 பண்டர்பூர்
13, 14, 15 பம்பாய்
16-17 நாசிக் (பஞ்சவடி திரயம்பகம்)
18 ஹோஷங்காபாத் (நர்மதை)
19 ஆக்ரா
20-21 மதுரா, பிருந்தாவனம், கோகுலம், கோவர்தனம்
22-23 டெல்லி
24, 25, 26 ஹரித்வார் (ரிஷிகேஷ்)
27 லக்னோ
28 அயோத்தி, நந்திக்ராமம்
29-30 பிரயாகை (த்ரிவேணி,) அலஹாபாத்)

மேமீ
1, 2, 3, 4, 5, ஸ்ரீகாசி
6-7 கயா
8, 9, 10 கல்கத்தா
11 பூரி, ஜகன்னாத்
12 ராஜமஹேந்திரி (கோதாவரி)
13 பெஜவாடா (கிருஷ்ணா)
14 சென்னைக்கு திரும்பிவரும்

மேமீ 14உ

மதராசுக்குத் திரும்பி வரும்.

சார்ஜ்கள் :—

மூன்றாவது வகுப்பு ரூ. 85

இரண்டாவது வகுப்பு „ 200

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

ராம் மோஹன் கம்பெனி,

21, செகண்டு லேன் பீச்சு, மதராஸ்.

Chats Behind Bars

BY

C. RAJAGOPALACHARI

Price As. 6 *Postage extra.*

Sangu Book Depot

Triplicane, Madras.

அது சுதந்திர நாடு ஆகுமா ?

ஒரு ஆங்கிலேயரின் எச்சரிக்கை

"பிலிப்பைன் தீவுகளுக்கு சுதந்திரம் தராதேயுங்கள். அவ்வாறு தருவது எங்களுக்குப் பிடிக்கவில்லை" என்று கொஞ்ச காலத்துக்கு முன்னே ஸர் பிரடரிக் வியட் என்ற ஆங்கிலேயர் அமெரிக்காவுக்கு உபதேசம் பண்ணியதை நாம் ஞாபகப் படுத்திக் கொள்ளவேண்டும். இந்தியா சட்ட சபைக்குக் கொஞ்ச காலம் அக்ராஸனாதிபதியாக இருந்த ஸர் பிரடரிக் வியாட்டின் இந்த ஆலோசனையை அமெரிக்க அரசாங்கம் துளிக்கூட லட்சியம் செய்யவில்லை. சென்ற சனிக்கிழமையன்று 'பிலிப்பைன் சுதந்திர மசோதாவில்' அமெரிக்க அக்ராஸனர் கையெழுத்து இட்டிருக்கிறார்.

தீவுகளின் சரித்திரம்

பஸிபிக் மகா சமுத்திரத்தின் கிழக்குப் பாகத்தில் மலேயாத் தீவுகளின் ஒரு பகுதியாக பிலிப்பைன் தீவுகள் இருக்கின்றன. சின்னச் சின்னதாக 7083 தீவுகள் சேர்ந்தது இந்தச் சிறிய நாடு. மொத்த விஸ்தீர்ணம் ஒரு லட்சம் சதுரமைல் இருக்கலாம். 125 லட்சம் ஜனங்கள் இவ்விடங்களில் வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் மலேயா ஜாதியினர் ஆவர். இந்த தீவுகளை ஸ்பெயின் அரசாங்கம் 300 வருஷ காலம் ஆண்டுக் கொண்டிருந்தது. பின்னர் 1899ஆல் ஸ்பெயினுக்கும் அமெரிக்காவுக்கும் சண்டை நடந்து சமாதானம் ஏற்பட்டபோது இந்தத் தீவுகளை அமெரிக்காவுக்கு ஸ்பெயின் தந்து விட்டது. அப்படிக் கைமாற்றப்பட்ட போது அந்தத் தீவுகளில் குடியிருந்த மக்களை ஒரு வார்த்தையாவது கேட்டதுண்டா? இல்லை. "நாட்டு மாந்தரெல்லாம் தம்போல் நரர்களென்று கருதார். ஆட்டு மந்தையா மென்றுலகை அரசரெண்ணி விட்டார்" நிற்க,

சுதந்திர ஆசை

பிலிப்பைன் தீவுகளின் தலை நகரத்திற்குப் பெயர் மனில்லா. அந்த ஊர் வர்த்தகத்துக்குப் பெயர்போன நகரம். அமெரிக்கரின் ஆட்சியின் கீழ் இந்தத் தீவுகளில் உள்ள ஜனங்களின் கல்வியறிவும், தொழில் திறமையும் அபிவிர்த்தியடைந்து வந்ததென்னவோ வாஸ்தவம். நாளடைவில் பிலிப்பினியர்களுக்கு சுதந்திர ஆசையுமேற்பட்டுவிட்டது. அமெரிக்கரின் ஆட்சியினின்று விடுபட்டு சுதந்திர மக்களாக இருக்க வேண்டுமென விரும்பினர். இம்மாதிரி ஒரு தேசத்து மக்கள் தங்கள் நாட்டைத் தாங்களே ஆண்டுக் கொள்ளவேண்டு மென ஆசைப்படுவது சகஜந்தானே. ஆனால் ஏதோ காரணத்தில் தம் வசமகப் பட்டுக் கொண்ட அந்த நாட்டுக்குச் சுதந்திரம் தர அமெரிக்க அரசாங்கம் மறுத்து வந்தது. 'சுதந்திர அமெரிக்கா' என்று பெயர் கொண்ட அரசாங்கம் தனக்குள் அடங்கிய ஒரு நாட்டுக்கு 'சுதந்திரம்' தர மறுப்பதைக் கண்டு உலகம் முற்றிலும் நகைத்தது. அமெரிக்க அரசாங்கத்துக்கும் ஏகாதிபத்திய ஆசை உள்ளூர இருந்துகொண் டிருக்கிறதெனத் தோன்றிற்று.

ஜப்பானுக்காக

பிலிப்பைன் தீவுகளுக்கு சுதந்திரம் தருவதை ஆட்சேபித்ததற்கு அமெரிக்க அரசாங்கத்திற்கு சில காரணங்களுமுண்டு. பிலிப்பைன் தீவுகள் ஜப்பானுக்கு அருகில் இருக்கின்றன. அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்குமுள்ள வர்த்தகப் போட்டியும் பண ஆசையும் இன்றைக்கு உலகமறிந்த விஷயங்கள். ஆகவே அமெரிக்காவின் தற்காப்பு நிமித்தமாகவாவது பிலிப்பைன் தீவுகள் தங்கள் ஆதிக்கத்திலேயே இருக்க வேண்டுமென அமெரிக்க அரசாங்கம் கூறுவது சரியானது தான். அமெரிக்காவிலும் பிலிப்பைன் சுதந்திரத்தை ஆதரிக்கும் ராஜீயவாதிகளேற்பட்டனர். கடைசியாக அமெரிக்க இராணுவத்தில் ஒரு பகுதியையும், கப்பற்படையில் ஒரு பகுதியையும் பிலிப்பைன் தீவுகளில் நிறுத்தி வைத்திருக்க பாத்யதை தருவதா யிருந்தால் அந்தத் தீவுகளுக்குச் சுதந்திர அரசியல் வழங்கி விடுவதாகச் சென்ற வருடத்தில் ஒரு மசோதா தயாரித்தார்கள்.

எகிப்து உதாரணம்

இந்த ஏற்பாட்டுக்கு பிலிப்பைன் தேசீய வாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை. அமெரிக்க இராணுவத்தை உள்ளேயே வைத்துக்கொண்டு சுதந்திர அரசியலென்றால், அந்தப் பெயர் பொருந்துமா? பிரிட்டிஷ் இராணுவத்தை உள்ளே நிறுத்திக் கொண்டு இன்றைக்கு எகிப்து தேசம் இருக்கிறதே அது சுதந்திர பூமியென்று சொல்ல முடியுமா? அந்த மாதிரி ஒரு 'ஸ்வராஜ்யம்' வேண்டாமென்றே பிலிப்பைன் தேசீய வாதிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அடிமை நாட்டின் போக்கு

ஆயினும் இன்னொரு கட்சியையும் கவனிக்க வேண்டும். அப்படியே ஏதாவது யுத்தம் ஏற்படுமோனால் அடிமைப் படுத்தப்பட்டுள்ள ஒரு நாடு ஏகாதிபத்திய அரசுக்கு அதிக உதவி செய்யுமா? அல்லது கௌரவமான நட்போடுள்ள ஒரு சுதந்திர நாடு அதிக உதவி செய்யுமா? பிலிப்பைன் தீவுகளின் தொழிலான சர்க்கரை விஷயத்தில் அதற்குச் சுதந்திரம் கிடைத்த பின்பு அமெரிக்க அரசாங்கம் ஏதாவது சலுகை காட்டுமா, காட்டாதா என்பதும் மிகவும் முக்கியமான விஷயம்.

பிலிப்பைன் சுதந்திர விஷயமாக இந்த வருடத்திலும் அமெரிக்கா ஓர் மசோதாவை நிறைவேற்றி யிருக்கிறது. அந்த மசோதாவுக்குத்தான் ரூஸ்வெல்ட் சென்ற சனிக்கிழமையன்று கையெழுத்திட்டார். இனி இதை பிலிப்பைன் சட்ட சபையும் ஒப்புக்கொண்டு விட்டால் இன்னும் பத்து வருடங்களில் பிலிப்பைன் ஓரளவு சுதந்திர அரசாக ஆகிவிடும் என்பதில் ஐயமில்லை. அமெரிக்க அரசாங்கம் இந்த பிலிப்பைன் விஷயத்தில் இப்போது கூடிய வரை கௌரவமாக நடந்துகொண்டிருப்பதாகவே அநேக ராஜீய வாதிகள் சொல்கின்றனர். ஆனால் எவ்வளவோ குடியேற்ற நாடுகளை வைத்துக்கொண்டுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு இத்தகைய தாராள மனப்போக்கு வரப்போகிறதா இல்லையா என்பது சந்தேகமாகவே யிருக்கின்றது. உதாரணமாக இந்தியாவுக்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்து கொடுப்பதற்குக் கூட கன்ஸெர்வேடிவ் பிரபுக்கள் எதிர்த்து வருகின்றார்களன்றோ!

"நரகத்தில் பிச்சைக்காரர்கள்"

ஆஹா! பிரசாரத்திற்காக ஒரு அருமையான நாடகத்தை மிஸ்டர் பாட்ரிக் டர்ன்புல் என்பவர் எழுதியிருக்கிறாராம். இந்தியாவில் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களுக்கு மிகமிகக் குறைவான சம்பளம் தரப்படுவதாகவும் அதன் பயனாக அவர்கள் கடனாளிகளாகி கஷ்டப்படுவதாகவும் சில பிரிட்டிஷார் தற்கொலையும் செய்து கொள்வதாகவும் அந்நூலில் வர்ணிக்கப்பட்டிருக்கிறதாம். உலகத்தில் இன்றைக்கு இந்திய அரசாங்கம்தான் உத்யோகஸ்தர்களுக்குக் கொழுத்த சம்பளம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்தச் சம்பளங்களே போதாதென்று பிரசாரம் செய்வது எத்தனை அயோக்கியத்தனமான பிரசாரம் என்பதை சொல்லத் தேவையில்லை. நிற்க, அந்த நாடகத்தை எழுதியவன் வர்ணித்துள்ள சில விஷயங்களும் கவனிக்கத்தக்கவை.

"பணக் கஷ்டத்தின் பயனாக நமது வெள்ளை மாதர்கள் இந்திய சாவுகார்களின் கையில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறார்கள்; தங்கள் கணவன்மாருடைய சம்பளம் செலவுக்குப் போதாத காரணத்தினால்தான் அவர்கள் கடன் வாங்க நேரிடுகின்றது. ஏதாவது செய்து சுகமாக ஜீவிக்கப் பிரயத்தனிக்கிறார்கள்*** பிறகு இது புருஷனுக்குத் தெரிந்தால் புருஷனும் மனைவியும் விலகும்படி நேரிடுகிறது. சிலர் தற்கொலை செய்து கொள்ளவும் துணிகின்றனர்" என்பது அந்த விவரணம். இதில் 100க்கு 99.9 பங்கு கற்பனை யென்பதை விவரிக்க வேண்டாம்.

மேற்படி நாடகத்தில் ஒரு வெள்ளை ஸ்திரீயை ஒரு இந்தியன் பற்றி இழுப்பது போல ஓர் காட்சி காட்டப்படுகின்றதாம். இந்தியர்கள்மீது ஆங்கிலேயர்களுக்கு ஆத்திரம் ஊட்டுவதற்கே இந்தக் காட்சி தயாரிக்கப்பட்டிருப்பது என்று நிச்சயமாய் சொல்லலாம். இப்படி பரஸ்பர விரோதம் ஊட்டுவதான ஓர் நாடகத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் என் அனுமதித்திருக்கின்றது என்பது இன்னும் எவருக்கும் விளங்கவில்லை.

கதரையே

அணியுங்கள்

உடன்கட்டை யேறுவார்களாம்

ஆத்தாள் பிராட்டியார் என்று ஓர் மாது பார்லிமெண்டில் அட்டகாசம் செய்துக் கொண்டிருக்கிறாளே, அவள் இந்தியாவைப் பற்றி ஓர் புத்தகம் (Main Facts of the Indian Problem) எழுதி யிருக்கிறாள். தேசத்தைக் குலைப்பதற்கு மட்டுமே இந்திய காங்கிரஸ் வாதிகள் அறிவார்களென்றும் உருப்படியான வேலை செய்ய அறியார்களென்றும் அவள் அப் புத்தகத்தில் எழுதி யிருக்கிறாள். இந்தியர்களின் ஆட்சிக்குட்பட்ட முனிஸிபாலிட்டிகளில் லஞ்சம் முதலிய தீமைகள் செழித்து வருவதாகவும் அவள் அப்புத்கத்தில் கண்டிருக்கிறாள்.

இந்த ஆத்தாள் பிராட்டிக்கு அறிவிக்கவேண்டிய விஷய மொன்றுண்டு. சமீபத்தில் வெளியான ஜான் புல் பத்திரிகையின்படி சீமையில் சர்க்கார் இலாக்காக்களில் லஞ்சம், மோசடி முதலியவை நிறைந்திருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. சுகாதார இலாகாவில் மட்டும் ஒரே வருடத்தில் 143 கணக்குகள் மோசடிக் கணக்குகளெனக் கண்டு பிடித்தார்கள். இந்த விஷயத்தை ஆத்தாள் அறிந்திருக்க வேண்டும். இந்திய முனிஸிபாலிட்டிகள் சுத்தமாக ஆட்சி செய்கின்றனவென நாம் சொல்ல வரவில்லை. ஆனால் சீமையில் தனக்கருகில் நடக்கும் மோசடிகளைத் தடுக்க முடியாத ஆத்தாள் பிராட்டியாருக்கு இந்தியாவைத் தாக்கிப் புத்தகம் எழுதுவதற்கு என்ன யோக்யதை இருக்கிறது என்றே கேட்கிறோம்.

ஆத்தாளின் இந்த அருமையான புத்தகத்தைச் சில சீமைப் பத்திரிகைகளும் ஆசீர்வாதம் செய்து ஆதரித்திருக்கின்றன. 'வெஸ்டர்ன் மார்னிங் நியூஸ்' என்ற ஓர் கந்தல் பத்திரிகை மேற்படி புத்தகத்தை ஆதரித்தது மட்டுமின்றி "இந்தியர்களுக்கு சுயேச்சை கிடைத்துவிட்டதானால், அந்த நாட்டில் இனி செத்துப்போன கணவனோடு ஸ்திரீகள் உடன்கட்டை யேறவேண்டுமென சட்டம் செய்து விடுவார்கள்" என்று எழுதி யிருக்கின்றது. இந்தப் பத்திராதிபனின் மூளைக்கு மெனிஞ்சேடிஸ் வியாதி வந்திருக்கிறது போலிருக்கிறது. இல்லாவிடில் இப்படி பிதற்றுவாரா? சரித்திரம் என்பது கழிசடைக் குதிரை யென்பது அவர் எண்ணம் போலும்! சரித்திரம் பின்புறமாய்த்தான் ஓடுமென்று அவர் நினைக்கிறார். இந்தியா சுயேச்சை யடைந்தால் 'ஸதி' வழக்கம் இந்தியாவில் மீண்டும் வந்து விடுமெனச் சொல்வது, நாளைக்கு பிரிட்டன் தனது காலனிகளை இழந்துவிட்டதானால் பிறகு ஆங்கிலேயர் கடற் கொள்ளைக்காரர்களாக ஆகி விடுவார்களெனச் சொல்வது போலிருக்கிறது.

ஸ்ரீயுத வ. வே. சு. அய்யர் எழுதிய

மங்கையர்க்கரசியின்

காதல் முதலிய கதைகள்

(தபாற்கூலி யுள்பட 10 அணா ஸ்டாம்பு)

சென்னையில் உங்களுக்குத் தெரிய வேண்டியவர்

ஆங்கிலோ-பர்மா பின்மென்

இடம்: 41, பிராட்வே.

4-C, சல்லிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர்.

சலவை முதல்தரமா யிருக்க வேண்டுமோ? சுத்தமாய் விலை உயர்ந்த உடைகளை ஜலத்தில் இடாமல். பெட்ரோலில் செய்து தரவேண்டுமோ? சாயம் அதுகளின் நிலைமை மாறாமலும் சாயம் போட்டுத் தரவேண்டுமானால், ஆங்கிலோ-பர்மா பின்மென்காரரிடமே உங்கள் துணிகளை அனுப்புங்கள்.

☞ கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள்—இவைகளுக்கு இலவசச் சலவை.

கவிதை

(ஸ்ரீயுத வ. வே. சு. அய்யர் எழுதியது)

ஆனால் பிரகிருதியின் தோற்றங்களோடு மனித உணர்ச்சிகளைச் சம்மேளனப் படுத்திக் கவிதை இயற்றுவதைச் சுவையுடன் செய்யவேண்டும். தமிழின் பிற்கால இலக்கியங்களில் இந்த இயைபு சுவையோடு செய்யப் படவில்லை. கம்பநாட்டாழ்வாரே இவ்விஷயத்தில் பெருங் குற்றவாளி என்றால், மற்றோரைப் பற்றி வினவவேண்டாம். உத்பிரேக்ஷையைப் பற்றி நாம் சென்ற வாரத்தில் கூறிய மொழிகள் இவ்விடத்தும் பொருந்தும். கம்ப ராமாயணம் பாலகாண்டத்தின் ஆற்றுப் படலத்திலுள்ள விருத்தங்களில் அனேகமாய் எல்லாவற்றையும், இன்னும் அந்தக் காவியத்தில் இயற்கைப் பொருள்களை வர்ணிக்கும் விருத்தங்களிற் பெரும் பான்மையையும் இந்தச் சுவையில்லாத இயைபுக்கு உதாரணமாகக் காட்டலாம். ஆனால் மாதிரிக்கு ஒரு விருத்தத்தை மாத்திரம் காட்டுவோம்.

“மானம் நேர்ந் தறம் நோக்கி மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழென
ஞானம் உன்னிய நான்மறை யாளர்
கைத்
தானமென்னத் தழைத்தது நீத்தமே”

என்னும் செய்யுளில் வரும் புகழும் தானமும் ஏற்ற இடங்களில் நல்ல கவிதைக்கும் பொருளாகும். ஆனால் மனிதச் செயல்களைக் காட்டும் இவ்வுபமானங்களுக்கும் உபமேயத்துக்கும் எண்ணெய்க்கும் நீருக்கும் உள்ள உறவு தான் இருக்கிறது. உபமான உபமேயங்கள் ஒரே இடத்தில் இருக்கின்றன என்பது ஒன்றைத் தவிர, அவை ஒன்றோடொன்று அளவளாவிப் பேருணர்ச்சியைத் தரவில்லை.

மேலே செய்த வாதங்களினின்று பெருங் கவிதையின் இன்றியமையாத இலக்கணம் இன்னதென்று நன்றாய் விளங்கும். அதாவது, கவிதையானது மனிதனுக்கு உலகில் வாழ்க்கையை நடத்தவேண்டிய முறை இன்னது என்று கற்பிக்கவேண்டும். ஆகையால் நல்ல கவிதையின் அடி—நாதம் அறமாக இருத்தல் வேண்டும். ஆனால் இந்த அறமார்க்கத்தைச் சாதாரணமாக, வெள்ளையாகச் சொல்லிவிட்டால் அது கவிதையாகாது. கேவலம் போதனா நூலாகத்தான் ஆகும். அறஞ் செய விரும்பு, ஆறுவது சினம் முதலிய சூத்திரங்கள் அறம் இன்னவை யென்று சொல்லுகின்றன. ஆனால் அவைகளில் கவிதை இல்லை என்பது வெளிப்படை. கவிதையானது தர்மத்தை அடி நாதமாகக் கொண்டு, அறிவின் பகுதியாகிற கற்பனா சக்திக்கு நல்லுணவைத் தந்து, இயற்கையின் அழகுகளையும், மனித வாழ்க்கையின் சுக துக்கங்களையும் உன்னதமான பாவங்களையும் சுவையோடு கோத்து, மனிதனுடைய இதயத்தில் பேருணர்ச்சிகளை எழுப்ப வேண்டும்.

இந்த இலக்கணங்கள் எந்தக் கவிகளிடம் நிரம்பி யிருக்கின்றனவோ, அவர்களைத்தான் உலகம் மகா கவிகள் என்று ஒப்புக் கொண்டிருக்கிறது. வால்மீகி, வியாசர், கம்பர், ஹோமர், தாந்தே, ஷேக்ஸ்பியர், மோலியேர், மில்டன், கத்தே, ஷில்லர் ஆகிய இந்தப் பதின்மர்தான் இது வரையில் உலகத்துக்குத் தெரிந்த கவிச் சக்ரவர்த்திகள். மற்றவர்களெல்லாம்—காளிதாசன் உள்பட—இவர்களுக்கு அடுத்தபடிதான். ஏனெனில் இந்தப் பதின்மரின் நூல்களில்தான் நாம் இதுவரை கூறியுள்ள கவிதா லக்ஷணங்களெல்லாம் ஒருங்கு நிறைந்திருக் கின்றன. உண்மையில் இந்த லக்ஷணங்களெல்லாம் அவர்கள் செய்த காவியங்களினின்று எடுத்தனவே ஒழிய வேறில்லை.

நமது நாட்டில் மேற்கூறிய இலக்கணங்கள் நிரம்பியுள்ள கவிகள் எழுதும் ஆற்றல் வளர்வதாக! நல்ல கவிஞர் தோன்றித் தமிழ்நாட்டுக்கும் பரதக் கண்டத்துக்கும் உலகனைத்துக்கும்கூட ஆநந்தமும் உறுதியும் தரும் காவியங்கள் இயற்றி நமது ஜாதிக்குப் பெரும் புகழ் சம்பாதித்துத் தருவார்களாக!

ஆனால் உண்மையான கவிகள்தான் வேண்டும். சென்ற மூந்நூறு வருஷங்களாக அனேகமாய் வெறும் போலிக் கவிகள்தான் தமிழில் வெளிவந்திருக்கின்றன. இந்த மூந்நூறு வருஷங்களில் நமது நாட்டில் முதல் தரமான கவிதை என்று சொல்லத் தகுந்ததாக ஒரு அடிகூட எழுதப் படவில்லை என்றே சொல்லலாம். ஆனால் கடிகை முத்துப் புலவர், பல பட்டைச் சொக்கநாதப் புலவர், அதிமதுரக் கவிராயர், காளமேகப் புலவர் ஆகிய இவர்கள் போன்று நிறை பொருளில்லாத கவிகள் செய்தவர்களின் தொகையோ எண்ணத் தொலையாது!

வரகவி என்று சொல்லுகிறார்கள். உண்மையான கவிகளெல்லாம் வரகவிகளே. எவனுடைய இருதயத்தினின்று பேருணர்ச்சிகளும் உன்னதமான பாவங்களும் அரிய அறிவுப் பொருள்களும் மகாப் பிரவாகம் போல பெருகிக் கொண்டு வருகின்றனவோ அவன் தான் கவி எழுத உரியவன். அவ்விதம் யாருக்குப் பிரவகிக்க இல்லையோ அவர்கள் கவி செய்ய இறங்கினால் அவர்களுக்கும் படிப்போருக்கும் காலம் நஷ்டமேயொழிய வேறு பயனில்லை. ஆனால் வரகவி யானவன் ஒன்றும் படிக்க வேண்டியதில்லை என்று நாம் சற்றேனும் சொல்ல வரவில்லை. கவிஞனானவன் அவன் காலத்து அறிவு முழுவதற்கும் கொள் கலமாக இருக்கவேண்டும். தவிர அவன் யாப்பிலக்கணத்தைப் பிழையற ஆராய்ந்து, கவிகள் எழுதி எழுதி அப்பியாசம் செய்துகொண்டு நல்ல சொல் நயமும் ஓசையும் தேடிக்

கொண்டு, தனக்கென்று ஒரு நடையை உரிமையாக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவன் கவியில் நயமும் ஒட்டமும் தெளிவும் ஏற்படும். உணர்ச்சிப் பொருள்களும் பாவப் பொருள்களும்தான் ஜீவனுதலாலும், இவை இரண்டும் மனிதருக்கு ஜாயமான கடாட்சத்தாலன்றி வருவதில்லையாதலாலும், இந்தச் செல்வம் இல்லாதவர்கள் கவி எழுதப் புகுவது தங்களுடைய புகழுக்கே ஹானி யாகும்.

ஏனெனில் கவிதை ஒன்றுதான் உலகத்தில் பண்டிதனால் எழுதத் தக்கது என்பது இல்லை. கடைத்தரமான கவியாக இருப்பதைவிட நல்ல உரை யாசிரியனாக இருத்தல் எவ்வளவோ மேல். உரை நடையில் உலகத்துக்கு எத்தனையோ உறுதிப் பொருள்களை எடுத்துக் காட்டலாம். நல்ல வசன நடை எழுதுவதற்கு மகா கவிக்கு வேண்டிய அவ்வளவு பெரிய யோக்கியதையும் வேண்டாம். சாதாரண சக்தி போதும். "நீ கவியில் சொல்ல முயலுகிற விஷயத்தை அவ்வளவு நன்றாகவே வசனத்தில் சொல்லி விடலாமானால் ஏன் தம்பி, பாடுகிறாய்?" என்று கார்லைல் கேட்கிறான். ஆகையால் இதயம் கவிதையால் நிரம்பி யிருந்து, மனிதருக்குத் தான் சொல்லப்புகும் உறுதிப் பொருளானது கவிதையிலன்றி வேறு பாஷையில் வரமாட்டேன் என்று முரண் செய்தாலொழிய, ஒருவன் கவி எழுத முயலாதிருப்பானாக. கவியானவன் பிறக்கிறானே யொழிய, தயார் செய்யப் படுகிறானில்லை என்பது ஓர் மேனாட்டுப் பழமொழி.

ஆனால் உண்மையான கவி மாத்திரம் நமக்கு அகப்பட்டு விட்டதானால் நமது நாடே ஈடேறிப் போய்விடும். இறந்து போன ஜாதிகளையும் எழுப்ப வல்லது கவிதை ஒன்றேதான். பிரான்ஸில் 110 வருஷங்களுக்கு முன் ஒரு சிறு தளகர்த்தன் ஒருநாள் இரவில் ஒரு சிறு குடிலில் உட்கார்ந்துகொண்டு ஒரு கவி எழுதினான். அந்தக் கவியானது, லா மார் ஸெய்யேஜ் என்ற பெயர் தரித்து, எங்கும் பரவி, பிரஞ்சு ஜாதியில் அவ்யக்தமாக இருந்த அக்கினியைக் கிளப்பி அவர்களை அக்காலத்தில் மனித ஜாதிக்கே சிகரமாகச் செய்து விட்டது. இத்தாலியாவிலும் 80 வருஷங்களுக்கு முன் பெருகின கவிதாப் பிரவாகமானது இத்தாலியர்களின் உலர்ந்த எலும்புகளில் புகுந்து அவர்களுக்கு நவ ஜீவனை அளித்து, இப்பொழுது அவர்கள் காட்டும் சௌகரியத்துக்கும் நாகரிகத்துக்கும் அறிவுக்கும் கூட நேரான காரணமாக இருக்கிறது. இன்றைக்கும் யந்திர விருத்தியினாலும், அது காரணமாக வளர்ந்திருக்கிற பேராசையாலும், இரக்கமின்மையாலும் நிலைகெட்டு, குணம் கெட்டுப் போயிருக்கிற மனித ஜாதியை இதைவிட இன்னும் இன்னும் அதிகமாகக் கெடாமல் காப்பதுவும் கவிதைதான்.

ராமாயணம், பாரதம், அரிச்சந்திரபுராணம் ஆகிய இவைபோன்ற காவியங்கள் நமக்குச் சிறு பிராயத்திலேயே நற்சுவை, தர்ம சிந்தை, நல்லொழுக்கம், பெருந்தன்மை, தர்மத்துக்காகப் பிராணனையும் கூட கொடுக்கச் சம்மதிக்கும் துணிவு முதலிய குணங்களைப் புகட்டி யிராதிருந்தால் நமக்கு இப்பொழுது நிற்கும் அறம் கூடத் தங்கி யிராது. கிறிஸ்துவின் சரிதத்தையும் அவர் வழியில் வந்த மகாத்மாக்களின் சரித்திரங்களையும் பாடுகின்ற காவியங்கள் ஐரோப்பாவில் இல்லாதிருக்கும் பக்ஷத்தில்,ஐரோப்பா இதுவரையில் உலகத்தை அதம் செய்திருக்கும். ஐரோப்பாவின் கதியும், இப்பொழுதே இவ்வளவு கோரமான போர் நடக்குமானால் அப்பொழுது எவ்வாறு இருந்திருக்கும் என்று யாரால் சொல்லுதல் சாத்தியமாம்?

ஆகையால் பயிர் மழையைப் பார்த்துக் கொண்டிருப்பதுபோல, நாமும் நல்ல கவிதையைப் பிரதீக்ஷித்துக் கொண் டிருக்கிறோம். நம்முடைய உறங்கிக் கிடக்கும் உணர்வுகளைத் தட்டி எழுப்பி, வறண்டுபோ யிருக்கிற நமது இதயத்தில் வீரியமும், தேச பக்தியும், அருளும், அன்பும், மானமும், பெருமையும், பரோபகாரமும் செய்யவேண்டும் என்கிற பேரவாவும் தழைத்தோங்கும்படி செய்யும் வல்லமை வாய்ந்த கவிஞர் நம் நாட்டில் உதிப்பார்களாக! இவ்வரிய குணங்களைப் பெற்றுப் பெருமை யடைய வேண்டும் என்கிற ஆவல் நமது ஜாதியில் இருந்துகொண் டிருக்கிறது. ஆனால் அது தற்காலம் அவ்யக்தமாக இருக்கிறது; மூங்கையாக யிருக்கிறது. இந்த அவ்யக்தமான ஆவலுக்கு உருவம் கொடுக்க முயல்வார்களாக! இந்த மூங்கையான ஆவலுக்கு வாக்கைத் தந்து அதைப் பேச வைப்பார்களாக! அப்பொழுதுதான் அவர்கள் கவிதையில், பேசும், சுவையும், பயனும் இருக்கும். இரண்டு கோடி ஜனங்கள் அவர்கள் கவிதையைப் பாடி மகிழும். இரண்டு கோடி ஜனங்கள் கண் விழித்துக் கொண்டு தங்களுக்கும் உலகத்துக்கும் பயன் தரும் காரியங்களில் இறங்குவார்கள்.

ஒரு கவிஞனுக்கு இதைவிட வேறு புகழ் என்னத்திற்கு? வால்மீகியும் வியாசரும் கம்பனும் கபீரும் அவரவர்கள் காலத்தில் அடைந்த புகழ் இவனுக்கு இன்றைக்குக் கிடைக்கும். தவிர சரஸ்வதி கடாக்ஷம் பரிபூரணமாக இருந்தால் இன்னும் அவர்கள் போல என்றும் அழியாத புகழைப் பெறுவான் என்பதில் தடையே இல்லை. ஆனால் இவன் மாத்திரம் வீணான மொழித் தொடர்களை நேர்ந்தபடிக்குக் கொட்டித் தள்ளாமல், தவம் செய்து தன்னுடைய அறிவையும் இதயத்தையும் விளக்கிக் கொண்டு மனிதஜாதிக்கு உறுதியைத் தருகிற விஷயங்களையே கவிதையால் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் அவனுக்கு சரஸ்வதியின் கடாக்ஷம் சம்பூரணமாகக் கிடைக்கும்.

சில கவிஞர்களுடைய மனதிலேனும் இந்த வியாசமானது நாம் கூறி வந்திருக்கிற உண்மைகளை நினை வூட்டி அவர்களை உலகப் பிரயோசனமான கவிகள் எழுதும்படி தூண்டிவிடுமாயின் எம்முடைய சிறு முயற்சியும் வீணானதாக இராது.

முற்றும்.

மகாத்மா காந்தி எழுதியவை

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனாசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.

"படக்காட்சியில் பைந்தமிழ்!"

(சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதியது)

"சினிமா டாக்கி," (பேச்சோவியம்) முதலியன ஜர்மனி, ருஷியாவின் பொதுமக்கள் வாழ்வையும், வரலாற்றையும் மாற்றி விட்டன. இப்போது ருஷியாவில் முதியோர் கல்வி (Adult Education) இப் படக்காட்சியின் மூலமே நடக்கிறது. இதைத் தமிழகத்திலும் பரவச் செய்ய அவாவுண்டு. அவ்வாறே நாட்டு வரலாறு, தமிழர் நாகரிகம், சமூக சீர்திருத்தம், உடல் நலம், உயிர் நலம், கடவுளறிவு, வீரர் காதை, அன்பர் வரலாறுகளைப் படக்காட்சியில் நமது தமிழர் காட்ட முயன்றால் தமிழகத்தில் ஒரு புத்துணர்வு எழும்—தடையில்லை.

நமது தமிழர் ஒன்று சிந்திக்க வேண்டும். பெரும்பாலும் மேனாட்டையும், வட நாட்டையும், குருட்டுத் தனமாகப் பின்பற்றக் கூடாது. தமிழ்க்கலை தனிக் கலையாக நிலவ வேண்டும்! மேனாடு, வட நாட்டுக் கலைகளின் அழகைத் தமிழன்னைக்கு அழகு செய்து அவற்றின் அழகணியுடன் தமிழ்த்தேவியின் பொன்னான திருமேனி துலங்க வேண்டும்.

சாதாரணமாக இராமாயணம், பாரதம், ரஜபுத்ர வீரர் கதை இவைகளே மேடைகளிலும் திரைகளிலும் ஆடுகின்றன. நமது தமிழர் வரலாற்றில் அற்புதமான கதைச் சுவையும், உள்ளன. அவற்றை வெளியேற்ற இப்போது எழுந்துள்ள தமிழ்ப் படக்காட்சியாளர் முனைய வேண்டும். கர்மாவினும் அரசி மங்கம்மாள் சரிதை மிகவும் இன்பமானது. மங்கையர்க்கரசி, கண்ணகி, அல்லி, ஔவை, திலகவதி, கோதை, காரைக்காலம்மை, ராஜ ராஜ சோழன், சுந்தர பாண்டியன், தேசிங்கு ராஜன், ஊமையன், சின்ன மருது, பெரிய மருது, இராமாநுஜர், அப்பர், ஞான சம்பந்தர், சுந்தரர், நந்தன், மாணிக்கர், வள்ளுவர், மணிமேகலை, பொற்கைப் பாண்டியன்,—இன்னும் எத்தனையோ தமிழர் வரலாறுகளைக் கலைச் சுவையுடன், வேண்டுமிடத்து ஏராளமான கற்பனைகளையும் சேர்த்து, கதைச் சுவை பெருக்கி ஓவியக் காட்சிகளின் ஆவியாக இயக்கினால், தமிழருக்குக் கலையுலகில் ஒரு நிலை யுண்டாகும். மீராபாய், தாராபாய், பத்மினி, சக்குபாய், ஹரிச்சந்திரன், சிவாஜி, பிரதாப சிங்கன், குருகோவிந்தன், சம்யுக்தை, துர்க்காவதி, சுராஜடௌலா, திப்பு சுல்தான், சந்த்ரகுப்தன், அசோகன், புத்தர், மஹாவீரர், சங்கரர், மத்வர், வித்யாரண்யர், ராமதீர்த்தர், விவேகாநந்தர், பரமஹம்ஸர், குருநானக், ராம்தாஸ், கபீர், ரவிதாஸ், கனகன், சோகமேளா நாமதேவர், முதலிய வீரரையும், பெரியோரையும் படத்தில் காட்டலாம். எனில், காட்சியில் தமிழர் முன்னேற்றத்தை ஊக்கும்படி கதைப் போக்கையும், நவரஸ விளையாட்டையும் அமைக்க வேண்டும். அஃதின்றி ஸமரஸம், ஒற்றுமை, உயரிய வாழ்வு (Ideal Life), தமிழர் நாகரிகம், பாரதக் கலை விளக்கம், பாரத மக்கள் வரலாறு, உலக சரித்ரம், ழாந்தார்க் (Jeand'Arc), வில்லியம் டெல் (William Tell), கிராம்வெல் (Cromwell), நெப்போலியன், உதசியன் கதை, அலெக்ஜாந்தர், அல்ஸெஸ்டிஸ், அபாலன், ஹனிபாலன், யூலிய கேசரி, மார்டின் லூதர், பிரான்ஸிஸ் முனிவர், கரிபால்டி, மாஜினி, கால்வின், லெனின், கெதேயின் பாஸ்டு, வர்கிலியன், எனீது, முதலியவை தமிழ்ச் சுவையுடன் தமிழ் மேடையில் ஆடவேண்டும்.

தற்போது உலகில் எத்தனையோ அரிய வீரரும், புலவரும் உள்ளனர். அவர்கள் அருமையும், ஆராய்ச்சியும், தமிழ் மேடையில் விளங்க வேண்டும். தற்கால இயலறிவாராய்ச்சிகளும், புதிய புதிய காட்சிகளும், கண்டு பிடிப்புகளும், ரேடியோ, கம்பியிலாத் தந்தி, மின்ஸார அற்புதங்கள், பொருள் நூலாரும், பொருட் சேர்வு நூலாரும் கண்ட ஆராய்ச்சிகள், செடி நூல், பயிர் நூல், உயிர் நூல்களில் பொது மக்களுக்கு நலம் பயக்கும் புதுமைகள்—எல்லாம் திரையில் காட்டலாம். தமிழர் குறைகளும், நிறைகளும், மற்ற நாட்டார் தத்தமது கலைக்கும், மொழிக்கும், பாடுபடும் சீர்மையும், நேர்மையும் படத்தில் காட்டித் தமிழுணர்வைப் பெருக்கி தமிழர் நரம்பில் வீறும்; வீரமும், ஏற்ற வேண்டும். இது முதன்மையானது. ஏன் தமிழரைப் பற்றியே பேசுகிறேன் என்பீர்? சுற்றி நோக்குக! மாரத நாட்டில் சிவாஜி, மேடையிலும், திரையிலும், வீரக்காட்சி யளிக்கின்றான். மாரதர், தமது கடவுளன்பர், வீர தீரர்களுக்கு விழா நடத்தி, அவர்களின் சரிதைகளை இனிது பாடிப் படத்திலும், பேச்சிலும், விளக்கி மக்கள் வாழ்வில் அவர்களுடைய உதாரணங்களை நட்ப

மாக பதிய வைத்துள்ளனர். மாரத தேசத்தில் எந்த மூலையிலும் அவ்வுணர்வு, தானே தனக்கு சாக்ஷியாகப் பேசும். வங்காளத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எங்கே எது நலமோ அதை உடனே விழுங்கித் தன் கலையில் செறிக்கச் செய்து புதுக் கலையும், புது நயமும், புதுக் கவியும், புதுப் பாட்டும், புதுப் படமும், புதுக் காட்சியும், புது மதமும், புது நாகரிகமும், புது உணர்வும் பொலிவிக்கவே வங்காளம் உருவெடுத்ததெனத் தோன்றுகிறது. சைதன்யர், வில்வ மங்களன். பரமஹம்ஸர், விவேகானந்தர், ரவீந்திரர், போஸ், சட்டர்ஜீ, இவர்கள் பெயர் வங்காளியின் உள்ளத்தில் அஜபாகாயித்ரியாக நிலவுகிறது! ஸி. வி. ராமன் வங்காளத்தில் பிறந்திருந்தால் நோபல் (Noble Prize) வெகுமதி கிடைத்தவன்றே படக்காட்சியில் விளக்கப் பட்டிருப்பார்.

ஹிந்தியின் கலை முன்னேற்றம் காற்றினும் கடிதாயிருக்கிறது. இவ்வளவு சிறிது காலத்தில் எம்மொழியும் ஹிந்தியைப் போல முன்னேறியதில்லை. அதன் கலை வெள்ளத்தில் எல்லா மொழி நயங்களும் சிற்றாறுகளாக விரைந்து பாய்கின்றன! அடடா, அழகும், அமுதும், கலையும், சுவையும், அறிவும் திறனும் அறிந்து கம்பீரமாக ஹிந்தி மகள் பொற் சலங்கை குலுங்க வெற்றி நடம் புரிகிறாள். தமிழ்த் தேவியின் கோயிலிலும் அவள் சதங்கை குலுங்கக் கைவளை கலீரென ஒயில் நடை நடக்கிறாள். நமது ஆவியைக் கொடுத்தேனும் நமது அன்னைக்குரிய அரியணையை மீட்க வேண்டாமா? கலைமகளின் குழந்தைகள் அழகுத் தோட்டத்தில் அணியணியாக முத்து முத்தாக விளையாடும் போது, தமிழ் மகளின் குழந்தைகள் தூங்கி விழலாமா?

ஏதோ ஒரு விழிப்பு இப்போது தோன்றியுள்ளது. சில இளந் தமிழ்ச் சிங்கங்கள் சென்ற 10-ஆண்டுகளாகத் தூண்டித் தமிழ்ப் பணி புரிந்து வருகின்றனர். புதுப் புது நயத்துடன் பத்திரிகைகள் எங்கும் விளங்குகின்றன. ஒவ்வொன்றிலும் ஒரு தனியழகு பொலிகிறது. சென்னையில் புதிதாக எழுந்துள்ள வாரப்பத்திரிகைகள், தமிழின் வெற்றிக் கொடியை ஒருவாறு உயர்த்தி வருகின்றன. தமிழ் ஓவியக்காரர் இன்னும் பாண்டியன் நாட்களைப் போன்று, திறமை வாய்ந்திருக்கின்றனர். தமிழ் மொழியும், அணியும், நகையும், நாணயமும், பொலிந்து வருகிறது. இயல்பாகவே தமிழுக்கு ஒரு எழுச்சி பிறந்துள்ளது. ஆனால் இது போதாது; தமிழுணர்வு கொழுந்தேற வேண்டும். அதற்கு ஒரு ஐந்தாண்டு திட்டம் போட்டுள்ளேன்; அதை இன்னொரு கடிதத்தில் எழுதுகிறேன். அதில் ஒன்று மேற்குறித்த பேச்சோவியம் (Talkies). அதைக் குறித்தே இக்கடிதம் எழுதலானது.

தன்னறிவு, தமிழறிவு, இரண்டும் தமிழனின் இருகண் மணிகளாகுக!

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் கோர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

தி யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் மதருஸ். 1906ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி :—சென்னை அபிஷியல் டிரஸ்டி.

2 கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள். 55 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.
12 லக்ஷத்திற்கும் மேலாகவே வருட வருமானம்.

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில :—
இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.
இது ஜரூராகவும் பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.
இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.
மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.
பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

"யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்"
செம்புதாஸ் தெரு, சென்னை.

M. K. ஸ்ரீனிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

கண்டோம் கஷ்டக் காட்சிகளை !

(மீராபாயின் உருக்கமான கடிதம்)

—:o:—

பீஹார் மாகாணத்தில் கஷ்டப் படுபவருக்கு ஆதரவு கூறிக்கொண்டு ஊழியர்களுக்கு உத்ஸாக மூட்டிக் கொண்டு மகாத்மா பிரயாணம் செய்துக் கொண்டிருக்கிறார். அவ ரோடு பிரயாணம் செய்யும் ஸ்ரீமதி மீராபென் தமது அனுபவங்களைக் கடிதம் மூலமாய் சொல்வதைக் கேட்க நெஞ்சம் கரைகின்றது.

பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னே பரந்தாமன் இராமன் இங்கு கங்கை யருகே வந்தபோது இத்தகைய பட கொன்றில் தானே பிரயாணம் செய் திருப்பார் என்று நான் எண்ண நேர்ந் தது. ஒரு சாதாரண பழைய பட கில் மகாத்மாவையும் எங்களையும் உட் கார வைத்து ராஜேந்திர பாபு, 'மோடி ஹாரி' என்ற ஊரை நோக்கி எங்களை அழைத்துப்போய்க் கொண்டிருந்தார். அது சூரியோதய காலம். மேகங்கள் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தன. புனிதத்தாய் கங்காதேவி சாந்தமாக தவழ்ந்து கொண்டிருந்தாள்.

இந்த சாந்த மயமான காட்சி நெடு நேரம் தோன்றவில்லை. அக்கரை போய்ச் சேர்ந்ததும் மோட்டார் கார் களில் ஏற்றப்பட்டோம். புழுதியையும் மண்ணையும் வாரி வீசிக்கொண்டு தூசிப் படலத்தினூடே நாங்கள் செல்ல வேண்டி யிருந்தது. போகும்போது சுற்றிலும் பார்த்தால் அய்யோ ! என்ன பரிதாபம் ! அத்தனை கிராமங்கள் பாழ டைந்து போயிருக்கும் காட்சி எங்கள் கண்ணிற் பட்டது.

14-ம் தேதி பதினோரு மணிக்கு 'லால்கஞ்ச்' என்ற இடத்துக்குப் போனோம். இடிந்து சரிந்து விழுந்த வீடுகளைக் கண்டு நாங்கள் திடுக்கிட்டுப் போனோம். ஆனால் இந்தப் பூகம்பத் தினால் அதிக நஷ்ட மடையாத ஊர் அதுதானென்று சொன்னார்கள். 1300 வீடுகள்தான் அழிந்தனவாம் ! ஏதோ 20 பெயர்தான் மரித்தனராம் ! அந்த ஊரில் மத்தியான போஜனத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டோம். வழி நெடுகக் குடியானவர்கள் நின்றி ருந்தனர். மகாத்மாவின் வண்டி தங் கள் தங்கள் கிராமத்தில் நின்று விட் டுத்தான் போகவேண்டு மென்று வற் புறுத்தினர். அத்தகைய நிறுத்தங் களில் ஓர் இடத்திய ஜனங்களைப் பார்த்து மகாத்மாஜி பின்வருமாறு பேசினார்.

"யாரோ உதவி செய்கிறார்களென்று நீங்கள் சும்மாயிருக்கக் கூடாது. உண் மையாக உழைக்க வேண்டும். இது வரையில் கையைக் கட்டிக்கொண்டு குந்தி யிருந்தவர்கள் கூட இனிமேல் வேலை செய்யவேண்டும். வேலை செய் யாதவனுக்கும், அரை குறையாக வேலை செய்பவனுக்கும் காசு தருவது பிச் சைக் காரர்களுக்குக் கொடுக்கும் காசு என்றே நான் சொல்வேன். நமது தேசம் பிச்சைக்கார் பூமியாக இருக்க லாமா?" என்பது அவரது உருக்கமான சொற்கள்.

பிறகு நாங்கள் போகப்போக ரோட் டுக்கள் எல்லாம் அடியோடு சீர் குலைந் திருந்தன. வழியில் ஒரு பெரிய மண் குன்று தென்பட்டது. அந்த இடத்துக் கருகே ஒரு பெரிய பாலம் இருந்ததாம். அது இடிந்துபோய் விட்டதாம். இவைகளை யெல்லாம் கடந்து ஒரு வாறு மோடிஹாரி என்ற நகருக்கு வந்து சேர்ந்தோம். அப்போது இருட்டு. வெளியே பார்த்தால் ஒன் றுமே தெரியவில்லை. நாங்களும் மிக்க அயர்ச்சி யடைந்திருந்தோம். மகாத் மாவின் கோஷ்டி அன்றிரவு இந்த ஊரில் தங்கியது.

மறுநாள் காலையில் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். ஹா! இதுதான் சம் பாரண்யமா? ஒரு காலத்தில் பச்சைப் பசேலென்றிருந்த கழனிகளெல்லாம் எங்கே ? கண் முன்னே ஒரு பெரிய பாலைவன மல்லவோ நிற்கிறது. இந் தப் பிரதேசத்தில் பூகம்ப காலத்தில் பூமி வெடித்து மண்ணையும் தண்ணீ ரையும் கக்கிற்றும். இப்போது தண் ணீரெல்லாம் காய்ந்து போய்விட்டது. ஆனால் மண் எங்கே போகும் ? வெள்ளை வெளேரென்று பனிக்கட்டி மாதிரி மணல்கள். ஆனால் பனிக்கட்டி உருகி ஓடுமே ! எப்படி இவ்வளவு மணலையும் இந்தப் பிரதேசங்களி னின்று அகற்றுவது ? எங்கே கொண்டுபோய்க் கொட்டுவது ? முப் போகம் விளைந்து கொண்டு தோப் போடும் துறவோடும் இருந்த இந்த பூமி இப்படியா போகவேண்டும் !

இந்தப் பிரதேசம் தான் மகாத்மாவுக் குப் பிரியமான பூமி. முன்னொரு காலத்தில் சம்பாரண்ய சத்தியாக்கிர கத்தைத் தலைமை வகித்து அவர் இங்கு நடத்தினாரல்லவா? அவருடைய பழைய சேவையை மறவாத குடிகள் ஓடிவந்து "காந்தி மகாராஜா வாருங் கள் ! வாருங்கள் !" என்று அழைத்து ஆசை பொங்கும் கண்களோடு தரிசித் தனர். மகாராஜா தங்களுக்கு என்ன உதவி செய்யப்போகிறார் என்று அந்த ஏழைகள் கேட்பது போலிருந்தது.

மகாத்மாவினால் கூட இந்தக் காட்சி தாளக்கூடவில்லை. தன்னுடைய செய் தியை வாய்விட்டுக் கதறினர். அதைக் கேட்கும்போது அத்தனை கண்களி லும் நீர் ! கூப்பிய கைகளோடு இந்தப் பாமர மக்கள் மகாத்மாவிடம் வைத்தி ருந்த உள்ளன்பை, நம்பிக்கையை என்னென்பது ! எவ்வளவு கஷ்டப் பட்ட ஜனங்கள் ! இன்னமும் எவ் வளவு கஷ்டப்படுகிறார்கள் ! இவர்க ளுக்கு இனி எப்படித்தான் ஜீவனம்? இங்கிருந்த வாய்க்கால் களெல்லாம் மண்ணால் மறைந்து போய்விட்டன. அதுமட்டுமன்று. பீகாரில் மழை பெய்ய ஆரம்பித்ததானால் அந்தர தாரையாக ஊற்றும். அப்போது இங் கெல்லாம் ஒரே வெள்ளக் காடாய்ப் போய்விடுமே! இந்த ஜனங்கள் எங்கே குடியிருப்பது ? ராஜேந்திர பாபுவின் கமிட்டியார் நிறையப் படகுகளைச் செய்து தயாராய் வைத்திருப்ப தென நினைத்திருக்கிறார்கள். ஆனால் இத்தனை லட்சம் ஜனங்களும் ஆடு மாடுகளும் வசிப்பதற்கு எத்தனை

படகுகளைத்தான் செய்துவைக்க முடியும். நிறைய வெள்ளம் வரவேண்டுமென்று இங்குள்ள ஜனங்கள் வேண்டுகின்றனர். அப்படி வந்தால் ஒருவேளை மண்ணை யெல்லாம் அப்புறப் படுத்தி விடாதா என்பது அந்தப் பாமர மக்களின் ஆசை!

20 லட்சம் ஏகரா நிலங்களி லிருந்தும் மண்ணை வாரிக் கொட்டுவதற்காக சுமார் ஒரு லட்சம் பேர்களை ராஜேந்திரரின் கமிட்டி நியமித்திருக்கிறது. ஆளொன்றுக்கு ஒரு நாளைக்கு ஒரு அணு கூலி. சிறு குழந்தைகள் கூட இந்த வேலைக்குத் தயாராய் வந்து நிற்கின்றன. அவ்வளவு வறுமை! அவ்வளவு பசி!

எவ்வளவோ இடங்களில் பூமி பாளம் பாளமாக வெடித்துக் கிடப்பதைக் கண்டோம். பத்து யானை கொள்ளும் அத்தகைய பள்ளமொன்று ஓரிடத்திலிருந்தது. அன்று மாலை மகாத்மா மோடிஹாரி நகரைச் சுற்றிப் பார்த்து வந்தார். தனது பிராண சிநேகி தனொருவனுக்கு கைகால் முறிந்து அவன் படுக்கையில் கிடந்தால் அவனுடைய நண்பன் வருந்துவானே அந்த மாதிரி மகாத்மா சுற்றிச் சுற்றி வந்தார். வீடுகளெல்லாம் பூமியிலேயே அடியோடு அழுந்திப் போய்விட்டன. ஒரு வீட்டின் உச்சிச் சுவர்மட்டும் ஓரிடத்தில் பூமிக்குமேலே தெரிந்தது.

அன்று மாலை காந்தியடிகளைக் காண கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர் வந்தனர். எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டுமென காந்திஜீ கேட்டுக் கொண்டார். மறுநாள் முஜபர்பூருக்குப் போனோம். கல்கத்தா மேயர் நிதியினின்று செலவிட்டு ஜனங்கள் தங்கியிருக்க முகாம் வீடுகள் கட்டப்பட்டிருப்பதை அங்கு கண்டோம். முஜபர்பூரைச் சுற்றி எங்கும் மண்! மண்! மண்தான்!

முஜபர்பூருக்கு நான் முன்னே ஓர் தடவை வந்ததுண்டு. இப்போது ஊரே அடையாளம் தெரியவில்லை. நான் முன் தடவை தங்கியிருந்த அந்த வீட்டைப்பற்றி விசாரித்தேன். அந்த வீடு இடிந்து விழுந்ததால் 7 ஸ்திரீகளும், குழந்தைகளும் மரணமடைந்தனராம். பிணங்களை 5 நாள் கழித்துத்தான் எடுக்க முடிந்ததாம். இந்த மாதிரி ஆற்றெணுக் கஷ்டங்கள் எவ்வளவோ இங்கு நடந்திருக்கிறது. முஜபர்பூரில் மட்டும் 3,000 பேர் இறந்ததாகக் கணக்குச் சொன்னார்கள். அந்த ஊரில் திடீரென்று மகாத்மாவைச் சுற்றி கும்பல் சேர்ந்துவிட்டது. மகாத்மா உணர்ச்சியோடு பேசினார்.

“உங்களில் யாரும் பிச்சைக்காரராகக் கூடாது. இந்தப் பூகம்பம் இன்னும் சில பிச்சைக்காரர்களைச் சிருட்டித்தது என்ற பேச்சே வரக்கூடாது. கண், கை, கால் அற்றவர்களுக்குத்தான் பிச்சை கேட்க உரிமையுண்டு. கைகால் உடையவர்கள் பிச்சை வாங்கி ஜீவிப்பது திருடுவதற்கு சமானமென்று நமது பகவத்கீதையில் சொல்லப்பட் டிருக்கிறது.

“இன்னொரு முக்கியமான விஷயம். பகவான் நமது படிப்பினைக்காக ‘பூகம்பம்’ என்ற இந்தப் பரிசை அனுப்பினாரென எண்ணிக் கொள்ளவேண்டும். ஒருவனை விட ஒருவன் உயர்ந்தவன் என்ற எண்ணத்தை இன்றைக்கே நாம் மறந்துவிட வேண்டும். இந்த கஷ்டத்தினின்று விடுதலை அடைய போதிய சக்தியை பகவான் அருள்வாராக’ என்றார் காந்திஜி. இருள் தாழ்வதற்கு முன் நாங்கள் பாட்னாவுக்குத் திரும்பி விட்டோம்.

பீஹாரை நேரில் சுற்றிப் பார்த்தால் தான் எவ்வளவு கஷ்டங்கள் எவ்வளவு நஷ்டங்கள் என்பது தெரிகிறது. எத்தனைக் கோடி ரூபா யிருந்தாலும் நிவாரணத்துக்குப் போதாது என்று எண்ணவேண்டி யிருக்கிறது. ஏதோ சில லட்சங்கள் தானே சேர்ந்திருக்கிறது. இது போதுமா?

மூளைநோய்—உஷார்!

வடக்கே அஹமதாபாத்தில் பலமாக ஏற்பட்டுள்ள தொத்து நோயான ‘மூளை நோய்’ சென்னை மாகாணத்துக்கும் வந்துவிடுமோ வென பயந்து சென்னை சுகாதார இலாக்கா டைரக்டர் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். இந்த வியாதி மகா கடுமையானதென்றும் ஆகவே மக்கள் வெகு ஜாக்கிரதையோடிருக்க வேண்டுமென்றும் எச்சரிக்கை செய்திருக்கின்றார்.

மூளையிலும் முதுகுத் தண்டில் உள்ள ஜவ்விலும் ஏதோ சில கிருமிகள் ஏற்படுவதால் ‘மெனிஞ்சமடீஸ்’ என்ற இந்த மூளை நோய் உண்டாகின்றதாம். நல்ல தேகாரோக்கிய முடையவன் மூலமாகவும் இந்த வியாதியின் விஷக் கிருமிகள் பரவக்கூடுமாம். ஆகவே எச்சில், மூக்குச்சளி முதலியவைகளை கண்ட கண்ட இடங்களில் துப்புவது இந்தத் தொத்து நோய் பரவுவதற்கு ஆதாரமா யிருப்பதாக சுகாதார அதிகாரி கூறுகின்றார். இந்த நோயால் தாக்கப்பட்டவனுக்குத் திடீரென்று ஜுரம் காணுமென்றும், விடாது தலைவலி யிருக்குமென்றும், வாந்தியும் அடிக்கடி ஏற்படுமென்றும், பிதற்றல் ஏற்படுமென்றும் சொல்லப்படுகிறது. இந்த வியாதி கண்டவனை உடனே தனியான இடத்திற்கு அனுப்பி சிகிச்சை செய்யவேண்டு மென்றும் இல்லாவிடில் சுற்றிலுமுள்ளவர்கட்கு ஆபத்தென்றும் சொல்லப்படுகிறது. ஒரே யிடத்தில் அதிகமாக ஜனங்கள் கூடுவதால் இந்த நோய் வெகு சீக்கிரம் பரவிவிடுமாம்.

இந்தத் தொத்து நோய் நமது மாகாணத்தில் பரவாதிருக்க யாவரும் ஜாக்கிரதையாக யிருப்பார்களாக!

“ஜகன்மோகினி”

பதினொன்றாவது ஆண்டு பிறந்து விட்டது.

இதில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதும் **தியாகக்கொடி*** என்னும் அதிசயாச்சரியமானதும், உண்மைத் தியாகத்தின் உயரிய தத்வத்தை விளக்கிக் காட்டுவதுமான துப்பறியும் நாவல் வெளிவருகின்றது.

வருஷ சந்தா ரூ. 1—8—0. தனிப்பிரதி அணு 2.

ஏஜண்டுகள் தேவை

“ஜகன்மோகினி” ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி சென்னை.

* அல்லது சமநிலைத் தோண்டு.

சில கேள்விகளுக்குப் பதில்

(மகாத்மா காந்தி)

ஒரு நிருபர் அடியிற்கண்ட கேள்விகளைக் கேட்டிருக்கிறார்.

(1) ஹரிஜனங்களுக்கு நன்மை செய்வதில் தங்களுக்கு வாஸ்தவமாக சிரத்தை யிருக்கிறதா? அல்லது ஹிந்துக்களின் தொகையை அதிகரிக்க வேண்டுமென்ற அந்தரங்க எண்ணத்தோடு வேலை செய்கின்றீர்களா?

(2) ஹிந்துக்களில் ஒரு பகுதியினரென ஹரிஜனங்களையும் தாங்கள் கருதுவதானால் மனுஸ்மிருதியில் கண்டுள்ள அடியிற்கண்ட கருத்துக்களுக்கு என்ன வியாக்யானம் சொல்வீர்கள்.

“பெரிய மனிதர்களைப் போல ஒரு பஞ்சமன் வியாபாரம் செய்து பணக்காரனாய் விட்டானானால் அவனுடைய சொத்துக்களைப் பிடுங்கிக்கொண்டு தேசத்தைவிட்டு விரட்டிவிட வேண்டும். (மனுஸ்மிருதி 10-96)

“சூத்திரனுக்கு யாராவது பாடம் சொல்லித் தந்தால் அந்த சூத்திரனோடு சொல்லித் தந்தவனும் நரகத்தில் நுழையவேண்டும். ஒரு பிராம்மணனுக்கு சூத்ரன் சொல்லிக்கொடுக்க முற்பட்டால் அவன் வாயிலும் காதிலும் கொதிக்கும் எண்ணெயை ஊற்ற வேண்டும். (14—89)

“உயர்ந்த குரலில் பேசுகின்ற சூத்ரனை சூடான இரும்பினால் சூடுபோட வேண்டும். பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், இவர்களுக்குச் சரிசமானமாக உட்காருபவனுக்கும் சூடுபோட வேண்டும்.” (8—276 ; 8—271)

மேற்படி புத்தகத்தைப் புனிதமானதென ஹிந்துக்கள் கருதவேண்டுமெனச் சொல்லப்படுகிறது. மேற்படி சுலோகங்களெல்லாம் புனிதமற்றவையெனத் தாங்கள் கருதினால் அதைப் பகிரங்கமாகச் சொல்வதோடு ‘காந்திஸ்மிருதி’ என்ற புதிய புத்தகத்தையும் தயார் செய்யுங்களேன்!

(3) தீண்டாமையை விலக்குவதாகக் கூறுகின்ற ஆர்யசமாஜிகள் தாழ்த்தப்பட்டவருக்கு ‘சுத்தி’ செய்வித்து சேர்த்துக் கொள்கிறார்கள். தாழ்த்தப்பட்டவரும் ஒரு ஹிந்துவானால் இந்த ‘சுத்தி’ செய்வானேன்?

இதைத் தாங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?”

இதை எழுதிய நிருபர் தம்மை ஒரு ஆதிதிராவிடரெனக் கூறிக்கொள்கிறார். ஆகவே எனது செய்கைகளிடத்து சந்தேகப்படுவதற்கு அவருக்கு உரிமையுண்டு. அவருடைய முதற் கேள்விக்குப் பதில் நான் சாகும் வரை அவர் பொறுத்திருந்து பார்ப்பாராக. அவர் எனது வார்த்தையை நம்புவதா யிருந்தால் இப்போதே சொல்லிவிடுகிறேன். ஹிந்துக்களின் தொகை அதிகமாக வேண்டுமென்பது எனது லட்சியமே அல்ல. ஒரு ஜாதியில் போலி போதகர்கள் ஏற்பட்டுவிட்டால் அதனால் அந்த ஜாதியே நசித்து விடுமென்பது நிச்சயம். ஆகவே ஹரிஜன இயக்கத்தை நான் நடத்துவதற்குக் காரணம் ஹிந்து மதம் புனித மடைய வேண்டும், தீண்டாமை ஒழியவேண்டும் என்ற நோக்கமே யாகும். அவ்வாறு சுத்த நடத்தையோடு ஒரே ஒரு ஹிந்து இருப்பாரானால் அதுவே எனக்குப் பரம சந்தோஷத்தைத் தரும். கொள்கை சாகவில்லை யென்பதற்கும் அது அறிகுறியாகும்.

நிருபரின் இரண்டாம் கேள்வி ரொம்ப சரியான கேள்வி. ஆனால் இந்தக் கேள்வியை என்னிடம் அவர் போட்டிருக்க வேண்டாம். ஏனெனில் சாஸ்திரங்கள் விஷயத்தில் நான் எத்தகைய அபிப்பிராயம் கொண்டுளேனென்பதை நான் ‘ஹரிஜன்’ பத்திரிகையில் இதற்கு முன்னமேயே எழுதியிருக்கிறேன். மனுஸ்மிருதி சாஸ்திரங்களின் ஒரு பகுதிதான். ஆனால் அந்த நூல் அச்சிடப்பட்டுள்ள எல்லா சுலோகங்களையும் மனுஸ் மிருதியின் வாக்கு என்று ஏற்றுக்கொள்ள நான் தயாராயில்லை. அச்சடித்த புத்தகங்களில் முன்னுக்குப்பின் முரண்படும் விஷயங்களை ஒதுக்கித் தான் படிக்க வேண்டும். மனுஸ்மிருதியில் அநேக உயர்ந்த கருத்துக்களிருப்பதால் அதை ஒரு வைதீக நூல் என நான் ஏற்றுக் கொள்கிறேன். நிருபர் காட்டியிருக்கும் அந்த சுலோகங்கள் நூலின் மூல தத்துவத்துக்கு விரோதப் படுவதாக இருக்கின்றன. உண்மையான மனுஸ்மிருதியின் கையெழுத்துப் பிரதி இப்போது யாரிடமும் இல்லை. ‘மனு’ என்று ஓர் பெரியார் வசித்தாரென்பதைத் நிரூபிக்கும் அத்தாட்சிகளுமில்லை. ஹிந்து மதத்தின் பல உண்மைகளைப் போதித்த பெரியார்களின் சரித்திரங்களெல்லாம் எப்படியோ அழிந்து போயிருக்கின்றன. ஆகவே சத்திய சோதனையில் ஈடுபட்டிருப்பவன் நமது சாஸ்திரங்களைப் படித்து அவைகளை ‘வழி காட்டி’ யாக்கிக் கொள்ள வேண்டும். எல்லா மதங்களுக்கும் அடிப்படையானது சத்தியமும் அகிம்சா தர்மமும் ஆகும். அவைகட்கு விரோதமாக உள்ள பாகங்களைத் தள்ளிவிடத்தான் வேண்டும்.

நிருபரின் மூன்றாவது கேள்வி ஆர்ய சமாஜிகளைத் தான் கேட்க வேண்டும். ஆர்ய சமாஜத்தில் சேர்ப்பதற்குமுன் ஹரிஜனங்களுக்கு ‘சுத்தி’ செய்து வைக்கிறார்களென்ற செய்தி எனக்கே புதியதாயிருக்கின்றது. ‘கோ மாமிசத்தைத் தொடுவதில்லை,’ ‘மதபானம் செய்வதில்லை’ என்ற விரதங்களைப் பூணும் போது அந்த விரதத்துக்கு அறிகுறியாக ஹோமம் செய்து வைப்பதை நான் பார்த்திருக்கிறேன். தீண்டத்தகாதவனும் ஹிந்துவே யென்பது உண்மையானால் ‘சுத்தி’ எதற்கு என்று நானும் கேட்கின்றேன். ‘சுத்தி’ செய்து வைக்கவேண்டியது யாருக்கு அவசியம் தெரியுமா? தீண்டாமையில் இன்னும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்களே அவர்களுக்குத்தான் பிராயச்சித்தம் செய்து வைக்க வேண்டும்.

மந்திர மகிமை

(பண்டித மாளவியா எழுதியது)

விலை அணா 2

சுதந்திரச் சங்கு காரியாலயம்,

திருவல்லிக்கேணி, சென்னை.

ஏன் பின் வாங்க வேண்டும்?

சென்ற 24வ யன்று திருச்சினுப் பள்ளியில் தீண்டாமை விலக்கு சம் பந்தமாக ஓர் பெரிய வாக்குவாதம் நடைபெறப் போகிறதென்று தமிழ் நாடு முற்றிலும், எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. 'ஸனுதனி'களின் கட்சிக்காக பூரி சங்கராச்சாரியாரும், சீர்திருத்தக் கட்சிக்காக அண்ணுமலே சர்வ கலாசாலேப் பண்டிதரான அன் பர் சோமசுந்தர பாரதியாரும் வாதிப்ப தென்று ஏற்பாடாகி யிருந்தது. மதுரை, ராமனுதபுரம், முதலிய பல இடங்களிலிருந்து வாக்குவாதத்தைக் கவனிக்கப் பெரியார் பலரும் திருச்சி யில் கூடியிருந்தனர். கடைசியில் பூரி சங்கராச்சாரியார் அந்த வாக்கு வாதத் துக்கு வருவதற்கு ஒப்புக்கொள்ள வில்லேயாம். இன்னுர்தான் சபையில் பிரசன்னமா யிருக்கவேண்டும், யாரை மத்தியஸ்தமாக வைப்பது, பொதுக் கூட்டத்தில் வாதிக்கமுடியாது என்று ஏதேதோ கோணற் கட்சிகளேக் கூறி பூரியார் தட்டிக் கழித்துவிட்டாராம். விவாதம் நடக்கவில்லே.

இவ்வாறு பூரி சங்கராச்சாரியார் செய்தது அவர் அமருகின்ற பீடத் துக்கே அவமானம் செய்ததுபோல நாம் எண்ண நேரிடுகின்றது. மகா னை ஆதி சங்கரர் யாரோடாவது வாக்குவாதம் செய்யத் தயங்கினுரென சரித்திரம் சொல்கின்றதா? புத்தனே, சமணனே, ஆணே, பெண்ணே யாரே யாயினும் ஆதிசங்கரர் தனது கட்சியை யெடுத்துக் கூறினுரென்பது இதி காஸம். ஆனல் அதே பீடத்தில் இன்று குந்தியிருப்பவர்கள் 'கண்டி ஷன்'கள் போடுகின்றனர்; பொது ஜனங்களின் மத்தியில் பேசுவதற்கு அஞ்சுகின்றனர். இந்தமாதிரி எவ்வ ளவு நாளேக்கு பொத்திப் பொத்தி மதத்தை நிர்வகிக்க முடியும்? தியாக புத்தியும், கோழைத்தனமற்ற வீர வாக் கும் உடைய பெரியார்களேத்தான் ஹிந்து மதத்தின் ஆச்சாரியர்களாக நாம் கருதவேண்டுமே யன்றி பீடத்தை யும், காஷாயத்தையும், வாக்கு சாதுர் யத்தையும் கண்டு ஏமாறலாகாது.

'ஹரிஜனங்களின் உதிரத்தில் ஓர் வகை விஷம் இருக்கின்றது' என்று விஞ்ஞானிகளுக்கும் எட்டாத ஓர் விந்தைப் பிரசாரத்தைச் செய்தவர் இந்தப் பூரி சங்கராச்சாரியார். எத்த னேயோ ஹரிஜனங்களின் இரத்தத்தை எடுத்துப் பரீட்சை செய்திருக்கும் டாக்டர் ராஜனுக்கும் தெரியாத ஓர் உண்மையை இந்தப் பூரி சங்கராச்சாரி யார் கண்டு பிடித்துவிட்டார் போலும்! ஆனல் அதே ஹரிஜனன் வேறு சம யத்தைத் தழுவிவிட்டால் அந்த விஷ ரத்தம் மறைந்து போய்விடுகிற தென் பது இந்தப் பூரியாரின் கட்சியென்று எண்ணுவதா என்ன?

இந்த மாதிரி குருட்டுத்தனமான பிரசாரங்களேச் செய்துகொண்டு சகோ தர வர்க்கமொன்றை இழிவுபடப் பேசிக்கொண்டு ஜனங்களுக்குள் வேற் றுமையை அதிகரித்துக்கொண்டு வடக்கே பூரி பிராந்தியத்தைச் சேர்ந்த ஒருவர் தெற்கே வந்து தமிழ்நாட் டில் அலேவானேன்? பூர்வாசிரமத்தில் மிஸ்டர் வெங்கட்ராமன் ஓர் தமிழரா யிருந்திருக்கலாம். ஆனல் சந்யாச ஆசிரமத்தில் அவர் வட இந்தியாவில் இருக்கவேண்டியவர். அவர் ஊருக்கு வடக்கே பீகாரில் பூகம்பத்தினுல் ஜனங்கள் பரம கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கிறுர்கள். அவர்களுக்கு உதவி செய்வதை மறந்து தென்னுட்டில் வந்து 'புதிய பத்திரிகைகளேச் சிருட் டிப்பதாகவும், காலேஜ்களேத் திறப்ப தாகவும்' ஏதேதோ சொல்லிக்கொண்டு அலேவதை நிறுத்திவிட்டுப் பூரியார் தமது சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்லட்டும்.

—"குசேலன்".

குருகோவிந்தசிங்கனின் ஞாபகம்

பாட்னுவில் மகாத்மா காந்தி தங்கி யிருந்தபோது குரு கோவிந்த சிங்க னின் பிறப்பசத்தைப் பார்வை யிடு வதற்காகச் சென்றுர். ஹரமந்திரம் என்ற அந்தக் கட்டிடத்தில்தான் சீக்கியர்களின் வீரத் தலேவனுக விளங் கிய குருகோவிந்தன் பிறந்தான். அங்கு மகாத்மாஜி சென்றபோது பாபாகுரு ஜிதசிங், குருசரணசிங் முதலிய சீக்கி யத் தலேவர்கள் நின்று வரவேற்றனர். அந்தக் கோயிலில் குருகோவிந்த சிங்க னின் பால்ய வயதில் உபயோகித்த சாமான்களும், அவனது வாள், வேல், அஸ்திரம் முதலியவைகளும் வைக்கப் பெற்றிருக்கின்றன. அவைகளே யெல் லாம் மகாத்மாஜி பக்தியோடு தரிசித் துத் திரும்பினர்.

தபால் விலே

'தபால் கார்டுகளே அரையணு வாக்க வேண்டும்' என்று மாஸ்வத் அகமத் கொண்டு வந்த பிரேரணே அஸ்ஸெம் பிளியில் தோற்றுப் போய்விட்டது. தபால் இலாகாவை சர்க்கார் நடத்து வதைவிட சவுகர்யமாக ஒரு தனிக் கம்பெனி நடத்தக் கூடுமென ஒரு அங் கத்தினர் குறிப்பிட்டார். சர்க்கார் நிர்வாகத்தைவிட மிகத் திறமையாக ஜனங்களுக்கு சவுகர்யமாக ஒரு கம்பெனியார் நடத்துவார்க ளென்றே நமக்கும் தோன்றுகிறது. ரிப்ளே கார்டுகளே ஒன்றே காலணு ஆக்கக் கூடாதா வென்று ஒருவர் கேட்டதற்கு அதைப்பற்றி யோசிப்பதாக சர்க்கார் தரப்பினர் கூறினர். புக்போஸ்டு விஷ யத்தில் ஐந்து தோலா எடையுள்ள கட்டுக்கு முக்காலணு வாங்குவதென் பதை சர்க்கார் ஊர்ஜிதமாக்கி விட்டது என்றே சொல்லலாம். ஆகவே இந்த வருடம் தபால் இலாகாவில் கட்டணக் குறைவு ஏற்படுமோவென எதிர் பார்த்த ஆசை வீணுகி விட்டது.

துஷ்ட மிருகங்கள் சாதுவாயின!

பூகம்பத்தினுல் ஏற்பட்ட அதிசயங் களில் மிகவும் ஆச்சரியமான விஷயம் அஸ்ஸாம், நேபாளக் காடுகளில் ஏற் பட்டிருக்கிறது. புலிகள், சிறுத்தை கள், கரடிகள், மலேப்பாம்புகள் முதலி யவை பூகம்பத்தினுல் ஹிமாலயம் நடுங் கியபோது அங்கிருந்து சரிந்து தரை மட்டத்துக்கு ஓடிவந்து விட்டன. ஆயிரக் கணக்கில் செத்துவிழுந்து ஆறு களில் மிதந்து வந்தன. பூமியில் ஆயி ரக் கணக்கில் புதைந்து போயின, எஞ்சியவை இப்போது அஸ்ஸாம் கிரா மங்களுக்கருகே அலேந்துகொண்டிருக் கின்றனவாம். அவைகளுக்கு அன் றைக்கு ஏற்பட்ட பயம் இன்னும் தெளியவில்லே. பூனேக்குட்டி போல சாதுவாக சுற்றிக்கொண் டிருக்கின்றன வாம். மனிதர்களேத் தாக்குவதில்லே யாம். பூமி குலுக்கத்தின் காரணமாக மனிதர்களும் தாங்களும் இயற்கைத் தேவியின் குழந்தைகளென்பதையும் சகோதரர்க ளென்பதையும் மிருகங்கள் உணர்ந்துகொண்டன போலும்!

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.
இரண்டாம் பாகம் ரூ. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-C, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. Foreign Rs. 6.

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.		
Advertisement rates per Page	Rs. 40	0	0
" Half Page	Rs. 20	0	0
" Quarter Page	Rs. 10	0	0
" per column inch	Rs. 1	8	0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40	0	0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20	0	0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10	0	0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1	8	0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-C, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

"His Master's Voice"

நம்பிக்கை வாய்ந்தது

பாடகரின் குரலை மிகவும் சுத்தமாக எடுப்பதையே "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" கம்பெனியார் எப்போதும் இலட்சியமாய்க் கொண்டிருக்கிறார்கள் ; செலவை அவர்கள் பாராட்டுவதில்லை. விடாமல் ஊக்கத்தோடு இவ்விஷயத்தில் அவர்கள் உழைத்து வந்திருப்பதால் தான், அவர்களுடைய கிராமபோன்கள் இன்று உலகத்தில் முதல் தரமா யிருக்கின்றன ; பாடகர் குரலை உள்ளபடி சுத்தமாய்க் காட்டுகின்றன ; நீடித்த காலமும் உழைக்கின்றன.

நீங்களே நிர்ணயித்து கொள்ளுங்கள்



உங்களுக்குச் சமீபத்திலுள்ள ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் வியாபாரி ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் மெஷின்களை நேரில் வைத்துக் காண்பிப்பார்.

ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்

கிராமபோன் கம்பெனி, லிமிடெட்.

ஸௌத் பரேட், பெங்களூர்.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.